
இதழ்–36
01.11.2021
பல்சுவை மின்னிதழ்
பெருவெள்ளத்திற்கான பயணம்

# கொண்டாடுவோம்!!! கொண்டாடச் செய்வோம்!!!




நவம்பர்-04ஆம் திகதி தீபங்கள் ஜொலிக்கும் தீபத்திருநாளை கொண்டாடும் தூமி மின்னிதழ் வாசகருக்கு தூமி மின்னிதழ் குழுமத்தின் சார்பாக தீபாவளி திருநாளை வாழ்த்திக்கொண்டே ஆசிரியர் பதிவுக்குள் நுழைகின்றோம்.

கொரோனா பேரவல செய்திகள் சற்றே குறைந்த திருப்தியில் மக்கள் திரளில் ஒரு தொகுதியினர் தம் பண்டிகைகளுக்கான ஏற்பாடுகளை செய்கையில், இலங்கைத்தீவில் ஏற்பட்டுவரும் விலை உயர்ச்சிகள் ஒரு தொகுதி மக்களின் மறுநாள் உணவை பற்றிய தேடல்களுடனேயே நகருகின்றது. பண்டிகைகளில் திளைக்க முற்படும் ஒரு திரள் மறுதிரள் மக்கள் கூட்டத்தின் பேரவலத்தையும் சற்று நிதானித்து சிந்தித்து செயற்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது.

தாராளமய பொருளாதார கொள்கையின் கீழ் விலை உயர்ச்சிகள் அதிகம் நடுத்தர மற்றும் தினசரி கூலி தொழிலாளர்களின் வாழ்வையே சிதைக்கிறது. பணம் படைத்தோர் பொருட்களின் விலை உயர்ச்சியின் தாக்கங்களை அறியாதோராவே காணப்படுவர். இதுவே தாராளமய பொருளாதாரக் கொள்கை உருவாக்கியுள்ள சமச்சீரற்ற சமூகமாகும்.

பண்டிகைகள், விழாக்கள் நிச்சயம் கொண்டாடி தீர்க்கப்பட வேண்டியவை. ஆயினும் அவை தனித்து கொண்டாடுபவையும் அல்ல. ஒன்றாய் கூடி கொண்டாட வேண்டியவை ஆகும். எனவே பண்டிகைகளை கொண்டாட முயலும் ஒரு திரள், பண்டிகைகள் என்ற எண்ணங்களற்று தினசரி வாழ்வை நகர்த்த போராடும் மக்களையும் இணைத்து கூடி மகிழ்விலேயே பண்டிகை கொண்டாட்டங்களும் முழுமை பெறும். அதேநேரம் கொரோனா ஏற்படுத்தியுள்ள புதிய அதேநேரம் கொரோனா ஏற்படுத்தியுள்ள புதிய சுகாதார விதிமுறைகளையும் அனுசரிக்கையிலேயே பண்டிகை களும் மகிழ்வாக நிறைவுறும்.

*எங்கும் பரவும் தீப ஒளி போல இன்பம் நிறையட்டும்!*



www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

துமி பல்சுவை மின்னிதழ்

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்
த. அபிவர்ணா

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்

செய்தியியலாளர்
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்தவை...

04 நஞ்சுணவும் இயற்கைமுறை விவசாயமும்
07 சித்திராங்கதா
12 ஓசோன் படையின் பாதிப்புக்கள்
14 நாக மனிதனின் சாப விமோசனம்
17 நூலறுந்த பட்டம்
20 ஈழச்சூழலியல்
24 ஞாபகங்கள் மழையாகும் ஞாபகங்கள் குடையாகும்
28 மலையக மக்களும் குடியுரிமைப் பிரச்சினையும்
32 சிங்ககிரித்தலைவன்
36 துமியாரின் பதில்கள்
39 ஏற்றுவோம் ஏற்றுவோம்
41 குறுக்கெழுத்துப்போட்டி
42 2021 ஐபிஎல் இல் சிறந்த வீரர் யார்?



# நஞ்சுணவும் இயற்கை முறை விவசாயமும்

ஹர்ஜனா ரவிச்சந்திரன்
இராமநாதன் நுண்கலைபீடம்

## அறிமுகம்

இந்தப் பூமியிலே உயிரினங்கள் உயிர் வாழ்வதற்கு உணவு மிக அவசியம். ஆனால் அந்த உணவின் தன்மை என்பது இன்று எந்த நிலையில் இருக்கின்றது என்பது தொடர்பில் யாரும் சிந்திக்கவில்லை. மனித நாகரிகத்தின் வளர்ச்சியில் ஆரம்பத்தில் மனிதன் தனக்கு தேவையான உணவை தானே உற்பத்தி செய்தான். விவசாயத்தை முழுமையாக நம்பி வாழ்ந்தான். அதன் பின்னர் விவசாயம் மக்களுடன் ஒருமித்ததாக காணப்பட்டது. ஆனால் இந்த விவசாயத்திற்கு என்ன தான் தற்போது நடந்தது. நாம் உட்கொள்ளும் மரக்கறிகள், பழங்கள், தானியங்கள் எல்லாம் விஷங்களால் மறைக்கப்பட்டு அதனை நாம் விலை கொடுத்து



வாங்கி உண்கின்றோம். இதனால் சிறுநீரகம், நுரையீரல், தோல் சார்ந்த நோய் நிலைமைகள் அதிகமாக ஏற்படுகின்றன.

## ஆரம்பகால விவசாயம்

ஆரம்பத்தில் மனிதன் தனக்கு தேவையான அல்லது தனது சமூகத்திற்கு தேவையான உணவை தானே உற்பத்தி செய்தான். அதற்கு இயற்கை உரமாக, குப்பைகள், கோமாதாவின் கழிவுகள், மண் புழுக்கள் ஆகியவற்றை பயன்படுத்தினான். பயிர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை வழங்குவதற்கு வேம்பின் பகுதிகள், சாம்பல் போன்றவற்றை பயன்படுத்தினான். அப்போது உண வில் நஞ்சு இருக்கவில்லை. அது போன்று அதிகமாக தானியங்கள், கீரைகளை உற்பத்தி செய்தான். இவ்வாறு சிறந்த உணவுகளை உட்கொண்ட எமது முன்னோர்கள் இன்றும் 70 வயதைத் தாண்டியும் அவர்கள் நிமிர்ந்த நடையுடன் வாழ்ந்து வருகின்றனர்.வீட்டின் வளவில் தமது அன்றாட உணவுத் தேவைக்காகவும், ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக கழிப்பதற்கும் வீட்டுத் தோட்டம் செய்தார்கள். ஆனால் இன்று?

## தற்போதைய விவசாயம்

இயற்கை முறை விவசாயத்தை கைவிட்ட மனித இனம் தற்போது நஞ்சு உணவை விலை கொடுத்து வாங்கி உண்டு வருகின்றது. வீட்டுத் தோட்டம் செய்வதற்கு நேரம் இல்லை. பணம் பணம் என்று ஓய்வில்லாமல்

உழைத்துக் கொண்டு இருக்கும் மனிதன் தான் என்ன உணவை உண்கின்றான் என்று கூடத் தெரியவில்லை. செயற்கை உரம், கிருமி நாசினிகளை அளவுக்கு அதிமாக பயன்படுத்தி அதிகரித்த மக்கள் தொகைக்கு ஏற்ப அதிகரித்த உற்பத்தியை மேற்கொள்ளும் நிலைக்கு உற்பத்தியாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர். அதனால் மித மிஞ்சிய உரம் மற்றும் கிருமி நாசினிப் பாவனையால் உற்பத்திப் பொருட்கள் பார்ப்பதற்கு கவர்ச்சியாக இருக்கும். ஆனால் அதனை உண்டால் நாளடைவில் எமது உடல் நஞ்சுணவால் பாதிக்கப்பட்டு நோய்களுக்கு உள்ளாகி இறந்து விடுவோம் என்று நாம் சிந்திப்பதில்லை.

### எமது உணவு எங்கே?

அதிக விளைச்சலையும் பளபளப் பையும் பெறுவதற்கான பல்வேறு பயிர் இனங்கள் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உதார ணமாக சொல்வதானால் விதை அற்ற பெரிய அளவினை கொண்ட சுவை குறைந்த பப்பாளிப்பழங்கள், ஏற்றுமதியை அடிப்படையாக கொண்ட ரொம் இ.ஜெசி மாம்பழ இனங்கள் மற்றும் விதை அற்ற திராட்சை பழங்கள், நீளமான கத்தரிக்காய் போன்றன சந்தைக்கு வந்துள்ளன. இவற்றின் வருகை ஏற்றுமதியைப் பொறுத்த வரையில் அதிக வருவாயைத் தந்துள்ளது. ஆனால் எமது இனிப்பான கறுத்த கொழும்பான் மாம்பழம், இனிப்பான சத்துள்ள பப்பாளிப்பழம் இவ்வாறு பல உணவுகளை நாம் மறந்து போய்விட்டோம். அதற்கு பதிலாக பார்வைக்கு கவர்ச்சியாக தோன்றும் மருந்து விசிறப்பட்ட பழங்களையும், மரக்கறிகளை நாம் கொள்வனவு செய்து எமது உடலை நஞ்சுக்கு அடிமையாகத் தயார் செய்து கொண்டு இருக்கின்றோம்.



### நாம் என்ன செய்ய வேண்டும்?

நமது விவசாய உற்பத்திகளில் அதிகளவு கிருமி நாசினிகள், இரசாயன உரங்கள் பயன்படு த்தப்பட்டு குறைந்த நிலப்பர ப்பில் கூடிய விளைச்சலை பெறுவதற்கு முயற்சிப்பதாலும், கிருமிநாசினி விசிறிய பின் அறுவடைக்கு இருக்கவேண்டிய இடைவெளிக் காலத்தை சரியாக கடைப்பிடிக்காமையினாலும் மரக் கறி வகைகளில் நச்சுத்தன்மை காணப்படுகின்றது.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் உணவுப்பொருட்களை இயற்கை யான முறையில் உற்பத்தி செய்வதற்கு எம்மைத் தயார்ப்படுத்த

வேண்டும். அதற்கு நாம் வீட்டுத் தோட்டம் ஒன்றை அமைத்துக் கொள்ள வேண்டும். இதற்குச் செலவு என்பது இல்லை. எமது உடலும் ஆரோக்கியமாக இருக்கும் அதே வேளை சிறந்த பொழுது போக்காகவும் அமையும். செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட இரசாயன கிருமிநாசினிகளின் பாவனையை தவிர்த்து இயற்கையான தாவர பீடை நாசினிகளை பயன்படுத்துவதன் மூலம் உணவுப்பொருட்களில் நஞ்சு கலப்பதை தவிர்த்துக் கொள்ளலாம்.



இயற்கை முறை விவசாயத்தில் தாவரப் பீடை நாசினி தயாரிப்பில் மாட்டுச்சலம், மாட்டுச்சாணம் பெரும் பங்கு வகிக்கின்றது. வேப்பம் மரத்தின் அனைத்துப் பகுதிகளும் கரைசலாக்கி பயன் படுத்துவதன் மூலம், பூண்டுக் கரைசல் தெளித்தல், சாம்பல் தெளித்தல் போன்ற விடயங்கள் தாவரத்துக்கு சிறந்த நோய் எதிர்ப்பு சத்தியை வழங்குகின்றது. வீட்டுத் தோட்டம் செய்வதற்கு முதல் மண்ணை பண்படுத்தும் போது வேப்பம் புண்ணாக்கையும் கலந்து பண் படுத்த வேண்டும்.

இயற்கைப் பசளை கிடைப்பதில் கால்நடைகள் முக்கிய பங்கு வகிப்பதாலும் கால்நடை வளர்ப் பையும் விவசாயத்தையும் ஒருங்கி ணைத்து செய்வதன் மூலம் இயற்கைப் பசளை பெரிய அளவில் கிடைப்பதுடன் தோட்டத்தில் கிடைக்கும் புற்கள், கழிவுகளை கால்நடைகளுக்கு தீவனமாகவும் பயன்படுத்த முடியும். அத்துடன் அசோலா இன பாசிகளை தொட்டிகளில் வளர்ப்பதன் மூலமும் கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்த முடியும்.

நாம் இரசாயனப் பசளைகள் பயன்படுத்துவதைக் குறைப்பதன் மூலம் எமது நீர் வளத்தையும் நிலவளத்தையும் பாதுகாக்கலாம். இயற்கை முறை விவசாயத்தை நாம் மேற்கொள்ளுவதால் நஞ்ச ற்ற உணவுகளை பெற்று கொள்ள முடியும். இயற்கை முறை விவசாயத்திற்கான உர தொட்டி அமைத்தல், கூட்டுப் பசளை தயாரித்தல், கால் நடை கொள்வனவு போன்றவற்றுக்கு மாவட்ட விவசா யத் திணைக்களங்களால் மானிய ங்கள், உதவித் திட்டங்கள் வழங்கப்படுகின்றது.

ஆகவே நஞ்சற்ற உணவுக்கு இயற்கை முறை விவசாயம் மிகவும் அவசியாமானது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

## கலாராணியின் இரசிகனாய்

# சித்திராங்கதா

35

காவ்யமோகன்

பொழுது போக்க வழியறியாத இரண்டு ஊர்ப்பெண்கள் சித்திராங்கதா வீட்டு வாசலில் பொழுதைப் போக்க வந்தனர்.

"சித்திராங்கதாவின் நிலையை எண்ணும் போது மிகவும் பரிதாபமாகத்தான் இருக்கிறது அக்கா. அவள் ஆடற்கலைக்கு இப்படியொரு சோதனை வந்திருக்கக்கூடாது." என்றாள் ஒருத்தி.

"சோதனை எல்லாம் தானாக வந்ததென்றா நினைக்கிறாய்? எல்லாம் அவரவர்கள் தேடி உழைத்துக் கொண்டதுதானே. ஆடற்கலையினில் தன்னை மிஞ்ச இங்கு யாருமே இல்லை என்ற நினைப்பில் இருந்தாளே, அதற்காகத்தான் இந்தத் தண்டனை. அனுபவிக்கத்தானே வேண்டும். இதில் நீ ஏன் பரிதாபப்படுகிறாய்? என்றாள் மற்றையவள்.

"நீங்கள் ஏனக்கா இப்படிப் பேசுகிறீர்கள்? அவளுடைய ஆட்டத்தை அன்று வீரமாகாளி கோயில் வாள் வழங்கும் விழாவில் பார்த்தவர்கள் எல்லோருமே வாய் பிளந்து நின்றார்களாமே, ஊரெல்லாம் சொல்வதைக்கேட்டு நானும் அவள் அகிலத்திற் சிறந்த ஆடலரசி என்றுதானே நினைத்திருந்தேன்"

"அடி பெண்ணே, ஊர் வாய்க்கு பத்தை பத்தாயிரமா கதைக்கிறதுதானே பிராக்கு, ஏன்? அன்றைய அந்த ஊரே வாய்பிளந்த ஆட்டத்தை அரசர் காணவில்லையா? கண்டிருந்தவர் தானே இன்று அந்த ஆட்டம் அரங்கேற வேண்டாம் என்று தடை விதித்திருக்கிறார். அப்படியென்றால் குற்றம் எதில் என்று இன்னும் உனக்கு விளங்கவில்லையா?"

"அப்படியென்றால் சித்திராங்கதாவின் ஆட்டத்தில் குறை கண்டுதான் அரசர் அரங்கேற்றம் அரசவையில் வேண்டாமென்று மறுத்துவிட்டார் என்கிறீர்களா அக்கா? நான் என்னவோ வன்னியர் விழாவினால்த் தான் அரங்கேற்றம் தடைப்பட்டுவிட்டது என்று நினைத்திருந்தேன்"

"பேதைப் பெண்ணே, அது கௌரவத்திற்காக கூறிக்கொள்வது. அரசர் கூட ஏதோ பரிதாபத்தில் அப்படியே இருக்கட்டும் என்று விட்டு விட்டார் போலும். அதற்காக அதுதான் காரணம் என்று நினைப்பது பெரும் முட்டாள் தனமல்லவா? உண்மை என்னவென்று கொஞ்சம் யோசித்தாவது புரிந்து கொள்ள வேண்டாமா?"

"ஆனால் எனக்கென்னவோ உங்கள் கூற்றில் இன்னும் நம்பிக்கையில்லையக்கா. ஒருவர் இருவர் என்றல்லா சித்திராங்கதாவின் நாட்டியம் பற்றி நல்லூர்க்கோட்டை

முழுவதுமே புகழ்ச்சொற்கள் எப்போதும் இருந்து கொண்டுதானே இருக்கின்றன. அவையெல்லாம் பொய்யாக இருக்குமா?”

“நீயும் அவர்களைப்போலவே முட்டாளாக இருக்கிறாயேடி பெண்ணே் அவையெல்லாம் வெறும் புகழாரங்கள் மாத்திரமே! இப்போது நாட்டில் எங்கு பார்த்தாலும் அது மட்டுந்தானே மிஞ்சிக்கிடக்கின்றது. புகழாரங்கள் தாண்டி உருப்படியாய் இங்கு எந்தக்காரியமும் நிகழ்ந்ததாயில்லை. அப்படிப்பட்ட அநாவசிய புகழாரத்தில் ஒன்றுதான் சித்திராங்கதா விடயமும்”



தீவாகரன்

வாய்க்கு வந்தபடி பேசிக் கொண்டிருந்தவர்களின் குரல் சித்திராங்கதாவிற்கு தெளிவாகவே கேட்டது. சிந்தனை முழுதும் வேதனையாகக் கிக் கிடந்தவளை இந்த வார்த்தைகள் பெரிதும் துன்புறுத்தின. ஆனால் அவர்களை எதிர்த்து தக்க பதிலடி வழங்க திராணி அற்றவளாக அவள் வாசற் கதவோரம் அமர்ந்திருந்தாள். அந்த நேரத்தில் அவளிற்கு ஒரு மூன்றாம் குரல் கேட்டது.

“அடி பெண்களே, பொழுது போக்க வழி தெரியாவிட்டால் இப்படி போதாத காலத்து கதைகளை கூறிக்கொண்டிருப்பீர்களா? அதுவும் ஆடலரசி சித்திராங்கதாவைப் பற்றியேவா? - செல்லுங்கள் வெளியே”

என்று உரத்துப் பேசியது அந்தக்குரல்.

“யார் நாமா போதாத கதை கூறுகிறோம்? நீர் தான் கூறுகிறீர்? அரங்கேற்றமே நடவாதவளை இன்னும் எப்படித்தான் ஆடலரசி என்கிறீர்களோ?”

“அரங்கேற்றம் நிகழவில்லை என்பதற்காக சித்திராங்கதாவின் ஆடற்கலையில்ஐயம்எழுப்ப முடியுமா? அவள் ஆட்டத்தை எங்கேனும் இதுவரை கண்டிருக்கிறீர்களா? வெறுமனே பொறாமை கொண்டு விலகித் திரிந்தவர்கள் இன்று சந்தர்ப்பம் வாய்த்ததும் வாயளக்க வந்துவிட்டீர்களோ? ”

என்றது அந்த மூன்றாம் குரல்.

“எம் வாயை அடக்குவதால் ஊர் பேச்சை மாற்ற முடியாது என்பதை மறவாதீர்- ஆடற்கலையின் அதிசயப் பிறவி என்று எல்லோரும் இப்படிப் பொய்ப்புகழ் உரைத்தே இன்றைக்கு இந்த நிலமைக்கு ஆளாக்கியிருக்கிறீர்கள்- இனியாவது திருந்தி நடவுங்கள்”

“யாரைப்பற்றி பொய்ப்புகழ் என்கிறீர்கள்? ஆடற்கலையின் அடிப்படை கூட அறியாத நீங்களெல்லாம் ஆடலரசி பற்றி பேசிக்கொண்டிருக்கிறீர்கள். இதுவே பெரும் அபத்தமாகும். எல்லாம் காலத்தின் கொடுமை. இதற்கு மேல் இவ்விடம் நில்லாது விரைந்து விலகுங்கள்.. ம்.. செல்லுங்கள்”

என்று கோபமாக உரப்பியது அந்தக்குரல்.

பெண்கள் இருவரும் என்னவோ செய்யுங்கள் என்பது போல் அலட்சிய நடையுடன் விலகிச் சென்றனர்.

அந்த மூன்றாங் குரல் யாருடையது என்பது சித்திராங்கதாவிற்கு தெளிவாய்ப் புரியவில்லையாயினும் அந்தக் குரல் கூறிய பதில்கள் அவளிற்கு ஓர் இணக்கமான நிம்மதியைக் கொடுத்தது.

“சித்திராங்கதா.... தேவி சித்திராங்கதா..."

என்று அந்தக்குரல் தன்னை அழைக்கும் சத்தம் கேட்டு மெதுவாய் எழுந்து சென்று வாசலருகே பார்த்தாள் சித்திராங்தா.

உக்கிரசேனன் நின்று கொண்டிருந்தான்.

உக்கிரசேனனின் குரல்தான் அந்த மூன்றாம் குரல் என்பது இப்போதுதான் சித்திராங்கதாவால் நினைவுபடுத்திக் கொள்ள முடிந்தது. அவனைக் கண்டாலே கோபங் கொள்ளும் சித்திராங்கதாவிற்கு இப்போது கோபம் வரவில்லை. இருந்தாலும் கேட்டாள்.

“என்ன வேண்டும் உக்கிரசேனா? தந்தை நல்லூர்க் கோட்டை விழாவிற்கு சென்றிருக்கிறார். வருவதற்கு இரண்டு மூன்று நாட்கள் கூட ஆகலாம் என்று கூறியிருந்தார். நீர் சென்று பின்னர் வாரும்” என்றாள்.

“பெரு வணிகர் எச்சதத்தரின்

கடமையுணர்வு கண்டு வியக்கிறேன் தேவி, தங்களது அரங்கேற்றத்தை நிறுத்தி நிகழ்கின்ற விழாவிற்காக கோட்டைக்கு சென்றிருக்கிறாரே”

“அவர் கடமை தவறாத ஊழியரல்லவர். திறைப்பொருடகள் அதிகம் வந்து சேரும் வேளையில் பெருவணிகர் உடனிருக்க வேண்டும் என்று அரண்மனை ஆணை வந்தது. திரும்பி வருவதற்கு நாட்கள் ஆகலாம் என்று கூறிவிட்டு புறப்பட்டு விட்டார்.”

ஒரு வெறுப்புக்கலந்த முகத்தோடு சொல்லிக் கொண்டிருந்தாள் சித்திராங்கதா.

“ஆமாம் . ஆமாம் . திறைப்பொருட்கள் பெருமளவில் வரும் போது அரசர் எல்லாவற்றையும் மறந்து விடுவார் தானே் அதுதான் தங்கள் நாட்டிய அரங்கேற்றத்தை தடுத்து நிறுத்தியதை கூட மறந்து பெருவணிகரிற்கு அழைப்பு விடுத்திருக்கிறார். தாங்களோ இங்கு தனிமையில் இருந்தபடி ஊரவர்கள் பொழுதுபோக்க வாயளக்கும் புலம்பல் மொழிகளை எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்”

ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டு தொடர்ந்தாள் சித்திராங்கதா.

“அதற்கென்ன உக்கிரசேனா, சேற்றில் புதைந்த யானையை காகங்கள் குட்டத்தானே செய்யும். சேற்றில் புதைந்தாலும் நான் யானை என்பதை மறவேன்”

“அற்புதம் தேவி, தங்களை யாராலும் சரித்துவிட முடியாது என்பது உண்மைதான். நான் தங்களைப் பார்ப்பதற்காகத்தான் இவ்வேளை இவ்விடம் வந்தேன்.”

“என்னைப் பார்ப்பதற்கா? என்ன காரணம் உக்கிரசேனா? நீரும் அந்தக் காகக்கூட்டத்தில் ஒருவர் தானோ?”

“அப்படியில்லை தேவி, நான் அந்தக் காகக் கூட்டத்தை கலைப்பதற்காகவே வந்தேன்” என்று கூறி உரக்கச் சிரித்தான். ஆனால் சித்திராங்கதா அந்தச் சிரிப்பை பொருட்படுத்தாது நிற்பதை உணர்ந்ததும் தன் சிரிப்பை நிறுத்தி “இப்போது தங்களிடம் ஒரு முக்கியமான தகவலை கூறிவிட்டுப் போகத்தான் வந்தேன்.” என்றான்.

“இனி என்ன முக்கியமான தகவல் எனக்கு தேவைப்படப்போகிறது. சரி கூறும். பார்க்கலாம்.”

“அப்படியில்லை தேவி. இது மிகவும் இரகசியமானது. எனது பிரபு வன்னி வேந்தர் வன்னியத்தேவர் அவர்களிடம் தங்களைப்பற்றியும் தங்கள் ஆடற்கலை பற்றியும் நான் அடிக்கடி சொல்வதுண்டு. இப்போது தங்கள் அரங்கேற்றத்தை அரசர் தடுத்து நிறுத்து விட்ட செய்தி கேட்டு அவரும் அதிகம் வருத்தம் கொண்டார். வன்னியர் விழாவிற்காய் யாழ்ப்பாணம் வந்திருக்கும் அவர் தங்களை சந்திக்க விரும்புவதாய் கேட்டுக் கொண்டார்.”

“தமது மன்னரை நான் எதற்கு சந்திக்க வேண்டும் உக்கிரசேனா?. ஒன்று கூறுகிறேன். புரிந்து கொள்ளும். யாழ்ப்பாண அரசவையிலே என் அரங்கேற்றம் நிகழ வேண்டும் எனத் துணிந்திருந்தேன். அன்றி வேறோர் அவையிலும் என் அரங்கேற்றம் நிகழ சாத்தியமேயில்லையாகும்.”

என்றாள் உறுதியான குரலில் சித்திராங்கதா.

“தங்கள் எண்ணம் நான் நன்கறிவேன் தேவி. ஆனால் தங்களிற்கு தற்சமயம் உதவ வல்லவர் வன்னியத்தேவரே என்று நான் கருதுகிறேன். ஆதலால் வன்னியத்தேவரை தாங்கள் சந்திப்பது தங்களிற்கு அனுகூலமாய் அமையும் என்று கருதுகிறேன்.”

“எத்தகைய அனுகூலம் இனி அமையப் போகிறது உக்கிரசேனா? அது எத்தகையதாய் இருந்தாலும் எனக்கு இனி அவசியமில்லை. நீர் செல்லலாம்” என்றாள் சித்திராங்கதா.

“தேவி, தாங்கள் எடுக்கும் முடிவுகளில் எவ்வளவு உறுதியானவர் என்பதினை யாவரும் அறிவர். இருந்தாலும் நான் தங்களை வற்புறுத்துவது ஏனென்றால் வன்னி சிற்றரசரை தாங்கள் சந்திப்பதில் வன்னி சிற்றரசர் பெரிதும் மகிழ்ச்சியடைவார். தங்கள் ஆடற் திறமைக்கு அப்படியொரு இரசிகர் அவர். அவர் யாழ்ப்பாணம் வரும் போது தங்களை எப்படியாவது சந்திக்க வேண்டும் என்று என்னிடம் கேட்டுக் கொண்டார். ஆடற் கலாராணி தன் இரசிகன் ஒருவனாய் அந்த வன்னி சிற்றரசரை சந்தித்தால் என் தொழில் தர்மத்தை நான் மீறாதவனாகிவிடுவேன்”

என்று மன்றாடிய குரலோடு கேட்டான் உக்கிரசேனன்.

தன் நாட்டியத்திறமை மீது எப்போதுமே தாளாத கர்வம் கொண்டிருந்த சித்திராங்கதாவின் மனது சில நொடிகளிற்கு முன் பேசிச்சென்ற அந்த இரண்டு பெண்களின் இழிமொழிகளைக் கேட்டு பெரிதாய் காயமடைந்திருந்தது. அவ்வேளையில் உக்கிரசேனன் தன் ஆடற்திறமை பற்றி புகழுரைத்து அந்த இருவரையும் விரட்டியடித்ததில் அவள் உள்ளம் குளிர்ந்து போனது என்பதும் மறுப்பதற்கில்லை. வன்னி சிற்றரசர் பற்றி அவள் ஏதுமறியாதவள். ஆயினும் இப்போதிருந்த மனநிலையில் தன் திறமைக்காக மீண்டும் ஓர் கௌரவம் கிடைக்கிறது என்கிற மிதப்பில் வன்னி சிற்றரசரை சந்திப்பதற்கு சம்மதம் தெரிவித்தாள்.

நன்றி கூறி விடைபெற்றான் நயவஞ்சகன் உக்கிரசேனன். தான் எதிரில் நின்றாலே எரிந்து விழுபவளை தன் வாக்கிற்கு கட்டுப்பட வைக்க அவன் மேற்கொண்ட முயற்சி இன்று வெற்றி பெற்றுவிட்டது. அந்தக் களிப்பில் அவன் கர்வத்தோடு நடந்து சென்றான். அந்த இரண்டு பெண்களிற்குமான சன்மானம் வன்னிமை அரசிடமிருந்து முறையாய் வழங்கப்பட்டது.

*வருவாள்...*

அதிரன்





3

# சர்வதேச ஓசோன் படலத்தின் பாதிப்பு மனித குலத்திற்கான சிவப்பு எச்சரிக்கை



ஓசோன் படையின் பாதுகாப்புத் தொடர்பாக 1976 இல் ஐ.நாவின் சூழல் திட்ட கூட்டத்தில் ஆராயப்பட்டது. 1977 இல் இது குறித்து வல்லுனர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஓசோன் படலப் பாதிப்பைத் தொடர்ந்து மதிப்பீடு செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சூழல் திட்டமும், உலக நிலவிய அமைப்பும் சேர்ந்து ஓசோன் படலத்திற்கான ஒருங்கிணைப்பு குழுவை அமைத்தனர். ஓசோனைப் பாதிக்கும் நிலைகளைத் தடுப்பதற்கான உலக நாடுகளிடையே ஒரு அனைத்துலக உடன்பாட்டை ஏற்படுத்துவதற்கான முயற்சி 1981 இல் தொடங்கியது. அத்துடன் 1985 மார்ச்சில் நடைபெற்ற வியன்னா மாநாடு முடிவுகள் உலக நாடுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.




இதனையடுத்து 1987 இல் கனடாவில் ஓசோன் படலத்தைப் பாதிக்கும் பொருட்கள் குறித்து, மொன்றியல் ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது தொடர்பான மாநாடுகள் 1990 இல் லண்டனிலும், 1992 இல் கெர்பன்கேகளிலும் நடத்தப்பட்டது. 1995 இல் CFC இனை நிரந்தரமாகத் தடைசெய்வதற்கான ஒப்பந்தத்தில் 150 நாடுகள் கைச்சாத்திட்டன. ஆனால் இப்பிரச்சினை இதனுடன் தீர்ந்து விடவில்லை. CFC இன் பயன்பாட்டை ஐரோப்பிய சமூகம் 2015 ஆம் ஆண்டுக்குள் முடிவுக்கு கொண்டு வந்துவிட வேண்டும் என்று குரலெழுப்பி வருகின்றது.

1990 களில் சுவிஸ்லாந்தில் சுமார் 52.8 மில்லியன் தொன் பாதகமான வாயுக்கள் வெளியிடப்பட்டதாக அறியப்பட்டுள்ள போதும், 2008 ஆம் ஆண்டில் 48.4 தொன்னாக குறைவடைந்துள்ளது. ஓசோன் படலத்தை பாதுகாக்கும் வகையில் சுவிசில் புதிய திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். 2012 ஆம் ஆண்டில் சுற்றாடலுக்கு

தீங்கு ஏற்படுத்தக் கூடிய வாயு வெளியேற்றத்தை குறைக்க முடியுமென நம்பிக்கை வெளியிடப்படுள்ளது.

மொன்றியல் சாசனத்தின் மூலம் ஓசோனின் மீள் உற்பத்தி நடவடிக்கையினை ஊக்குவிக்கும் தொழிற்பாடுகள் செயற்படுத்தப்படுகின்றன. கைத் தொழில் குழுக்கள் சூழல் – நட்பு முறையிலான பாதுகாக்கப்பட்ட மாற்று முறைமைகளைக் கையாள முனைந்து வருகின்றன. தொழில்நுட்பத்தின் ஊடாக மாற்று திட்டங்களை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் அமுல்படுத்துவதினை ஊக்குவித்து வருகின்றன.

மொன்றியல் பிரகடனத்தில் கைச்சாத்திட்ட நாடுகளும் சாசனத்தில் உள்ள இலக்குகளுக்கு கட்டுப்பட்டிருப்பது, சூழல் நட்புத் தொழில்நுட்பத்திற்கு நன்மை பயப்பித்துள்ளது. தேசிய ரீதியாக இது தொடர்பான சட்ட அமுலாக்கங்கள் தேசிய ஓசோன் அமைப்பினால் (National Ozone Unit) செயற்படுத்தப்படுகின்றது. இலங்கையில் அனைத்துலக ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட குறியீட்டு முறைமை (Coding) Harmonized System (H.S Code) ஒன்றினை ODS பொருட்களின் இறக்குமதியினை கண்காணிப்பதற்கு அறிமுகப்படுத்தியுள்ளது. இலங்கை CFC அல்லது ODS இனை அடிப்படையாக வைத்த உபகரணங்களை தற்போது உற்பத்தி செய்யவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உலகிற்கே பாதுகாப்பு படையாகக் காணப்படும் இவ் ஓசோன் படையானது மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளது. இதன் உண்மையினைப் புரிந்து கொண்டு அனைத்துலக நாடுகளும் தமது சுயாதீன சிந்தனைகளைச் சற்று தியாகம் செய்து இவ் ஓசோன் படையின் பாதுகாப்பில் அக்கறை காட்டுமானால் ஓசோன் படையினைப் பாதுகாப்புடன் பேணமுடியும். வளரும் பல நாடுகளில் வசிக்கும் மக்களுக்கு சுற்றுப்புறச் சூழல் குறித்த விழிப்புணர்வு இன்னும் வரவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

தூய்மையான இருப்பிடம் என்பது ஆரோக்கியமான வாழ்வின் அடிப்படை. மனிதன் இயற்கையை விட்டும், தூய்மையை விட்டும் தூ ரமாய் செல்லும் போது பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றது. ஆகவே, ஒவ்வொரு தனிமனிதனும் இதனை உணர்ந்து செயற்படுவானேயானால், இயற்கை எம் மீது தொடுக்கும் போரில் இருந்து விடுபட முடியும் என்பது திண்ணம்.






# புதிர் 15
# நாக மனிதனின் சாப விமோசனம்

சினமிகா

தன்னை காட்டின் வழியே சுமந்து சென்ற விக்கிரமாதித்தனிடம் வேதாளம் ஒரு கதை சொல்ல தொடங்கியது.

“இரத்தினபுரி” என்ற ஊரில் ஒரு முனிவரின் சாபத்தால் சில நேரம் பாம்பாகவும் சில நேரம் மனிதனாகவும் இருக்கும் ஒரு இளைஞன் வாழ்ந்து வந்தான். அவ்வூரின் காட்டை ஒட்டிய பகுதியில் வாழ்ந்து வந்த அவன், அந்த ஊரின் ஒரு இளம் பெண்ணை மிகவும் விரும்பி அவளை திருமணம் செய்து கொள்ள ஆசைப்பட்டான். ஆனால் இவனின் இந்த சாபத்தைப் பற்றி அறிந்த அந்த பெண்ணும் இவனை திருமணம் செய்து கொள்ள மறுத்துவிட்டாள். இதனால் கவலையடைந்த அவன் ஒரு துறவியிடம் சென்று தன் நிலையைக் கூறி வருந்தினான்.

அதற்கு அந்த துறவி,
“நீ நாகமனிதனாக இருப்பதால் உனக்குள் நாகமாணிக்கம் இருப்பதாகவும் அதை தனியாக எடுத்து வைத்துவிட்டு தினமும் இரவு நேரத்தில் தவமிருந்தால் நீ மீண்டும்




முழுமையான மனிதனாக மாற வாய்ப்பிருப்புள்ளது” எனக் கூறினார்.

அதன் படியே அந்த நாகமனிதனும் செய்து வந்தான். அப்போது ஒரு நாள் தனது மாட்டை தேடிவந்த ரங்கன் என்ற இளைஞன், காட்டு விலங்குகள் துரத்தியதால் இந்த நாக மனிதன் வசித்த புற்றிற்கு அருகிலுள்ள மரத்தில் ஏறிகொண்டன். இரவு முழுவதும் அந்த மரத்திலேயே இருந்த அவன் அருகிலுள்ள புற்றிலிருந்து ஒரு நாகம் வெளிவருவதைக் கண்டான். அந்த நாகம் ஒரு நாகரத்தினத்தை வெளியே கக்கிவிட்டு, ஒரு மனிதனாக மாறி தியானத்தில் ஈடுபடுவதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தான். பொழுது விடியும் போது அந்த நாகமனிதன் மீண்டும் நாகமாக மாறி, தனது இரத்தினத்தை விழுங்கிக்கொண்டு மீண்டும் புற்றிற்குள் சென்று மறைந்ததை ரங்கன் கண்டான்.

மறுநாள் இதைப்பற்றி தனது நண்பன் கண்ணனிடம் கூறினான் ரங்கன். அதற்கு கண்ணன், நாகரத்தினம் மிகவும் சக்திவாய்ந்தது, எனவே இன்றிரவு அந்த நாகமனிதனிடமிருந்து நாம் நாகரத்தினத்தை எடுத்துக் கொள்வோம் என்று கூறினான். ரங்கனுக்கு இதில் விருப்பமில்லை என்றாலும் கண்ணனுடன் துணைக்கு சென்றான். இருவரும் அந்த நாகமனிதன் இருக்கும் புற்றிற்கு அருகில் ஒளிந்துகொண்டு காத்திருந்தனர். வழக்கம் போல் அந்த நாகமனிதன் தனது நாகரத்தினத்தை வெளியே வைத்துவிட்டு தியானத்தில் ஆழ்ந்த போது ரங்கனின் நண்பனான கண்ணன், அந்த இரத்தினத்தை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டான். தியானம் களைந்து பார்த்த நாகமனிதன், தனது நாகரத்தினம் திருடப்பட்டதால் தான் முழுமையாக மனிதனாகும் தனது இலட்சியம் தடைபட்டதை எண்ணி வருந்தினான்.


இதற்கிடையே அந்த இரத்தினத்தை எடுத்துக்கொண்டு சென்ற கண்ணன் என்றும் இல்லாதபடி தனக்குள் ஏதோ மாற்றங்கள் இருப்பதை உணர்ந்தான். நல்ல குணங்கள் அவனிடம் மேலோங்கி காணப்பட்டதுடன் மந்தமான அறிவாற்றல் உள்ள அவனுக்கு புத்திக்கூர்மை அதிகரித்துள்ளதாகவும் உணர்ந் தான். இதனை சோதித்துப் பார்க்க எண்ணி ஒரு அறிஞனிடம் சென்று தனது புத்திக்கூர்மையை பரிசோதிக்கும்படி வேண்டி நின்றான். அவரும் அவனிடமொரு கேள்வி கேட்டார்.

நீங்கள் ஒரு வேலியை அமைப்பதன் மூலம் மேலே உள்ள நிலத்தை இரண்டு சம நிலங்களாக பிரிக்க வேண்டும். ஒவ்வொன்றும் சம ஏக்கர் மற்றும் ஒரே வடிவம் இரண்டையும் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு



இந் நிலத்தைப் பிரிக்க வேலி எங்கு அமைக்கப்பட வேண்டும் என்று கண்டுபிடிக்க முடியுமா? மூன்று நிமிடங்களில் நீங்கள் இதனை தீர்க்க வேண்டும். கண்ணனுக்கோ அது மிகவும் இலகுவாக இருந்தது சிறிது வினாடிகளிலே சரியான பதிலை அளித்தான்.

## புதிர் 14 - விடைகள்



நாகரத்தினத்தின் சிறப்பை உணர்ந்த அவன் அதை நல்ல முறையில் பாவிக்க எண்ணினான். பக்கத்து ஊரில் பாம்பு கடியால் பாதிக்கப்பட்டவர்களை, அந்த இரத்தினத்தைக் கொண்டு குணப்படுத்தினான். அதே நேரத்தில் அந்த நாகமனிதனும் சாப விமோச்சனம் பெற்று மனித உருவம் கொண்டான்.

விக்ரமாதித்தனே இது உங்களுடைய நேரம் கண்ணனின் பதில் என்னவாக இருந்திருக்கும் என கண்டுபிடியுங்கள் பார்க்கலாம். பதிலளிக்காவிடின் உமது தலை சுக்கு நூறாக சிதறும் என கூறி அமைதி கொண்டது வேதாளம்.

தூமி அன்பர்களே விக்ரமாதித்தனுக்கு உதவ உங்கள் பதிலை எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

## உலகிலேயே உயரமான பெண்ணாக ருமைசா கெல்கி

துருக்கியை சேர்ந்த 24 வயதுடைய ருமைசா கெல்கி 7 அடி 7 அங்குலம் உயரத்துடன் உலகிலேயே உயரமான பெண் என்ற உலக சாதனையை படைத்துள்ளார். அரிய மரபணு கோளாறு காரணமாக கெல்கி இவ்வாறு அசாதாரண உயரத்தை எட்டியதாக கூறப்படுகிறது.



# நூலறுந்த பட்டம்......

லிமோ

காற்றில் சுழன்று ஆடியபடி - என்
வீட்டு முற்றத்தில் விழுந்த
நூலறுந்த பட்டமது
ஏதோ புன்னகைத்தபடி
தவண்டெழுந்து ஓடிச்சென்று
கையில் தூக்கிப் பற்றிய அக்கணம்


எங்கிருந்தோ நினைவுகள்
பலகூடி வந்து தவழத்தொடங்கின -
என் ஆழ்மனதில்
பட்டத்தைக் கையில்
இறுகப்பற்றிய படி
நினைவு நூலை மீட்பதென சற்றே
அமர்ந்துகொண்டேன்

ஏடு தொடங்கி
ஏழெட்டாம் ஆண்டு வரை
பள்ளிப் படிப்பில் மறைத்திட
முடியாத பக்கங்கள் அவை
ஆனி ஆடி யென அடியெடுத்து
வந்து விட்டால்
வீதிகள் மைதானமென என்
கால்களின் பயணங்கள்

விசும்பின் தடம் வருடிய
தென்றலும் சாட்சி
செருப்பின்றி நான் ஓடிய
தூரத்தின் வரம்புகளுக்கு!
உயரப்பறந்து வட்டமிட்ட
கழுகுகளும் சாட்சி
ஏறிய பட்டமதின் ஓய்வறியா
உயரங்களுக்கு!

தொடங்கியது ஆனி அன்று.....
மரங்களின்
இடைவிடாத அசைவுகளுடன்
உரசிய காற்றின்மொழிகள்
கேட்கக் கேட்க புரியாத
புதிராயினும்
மரத்தின் மேல் கொண்ட
தென்றலின் காதலே அது

உரசி உரசி
வளர்த்து வந்த தென்றல்
தீண்டிய காதலும் முத்தமும்
ஒரு புறம் இருக்க
அம்மாவின் தையல் நூலை



திருடியபடி விளக்குமாறில்
ஈர்க்கிள் முறித்த
என் கைகள் ஒருபுறம்


பட்டம் கட்டத் தெரியாதெனினும்
முடிந்தளவு ஏதோ
மீண்டும் மீண்டும்
முயற்சிக்கிறது அக்கைகள்
விசும்பில் ஏவியபடி நின்ற யாரோ
ஒருவனின் பட்டமே
அன்று எனக்கு தட்டிக்கொடுத்த
ஊக்குவிப்பும் கூட

நான்கைந்து ஈர்கிலுடன்
ஒரு தடி தைத்து
ஒரு கட்டு நூலோடி மணிநேரம்
ஒன்று நீண்டு கழிய
மாவெடுத்து வெந்நீருடன்
அம்மாவிடம் அடிவாங்கி
அழுது முடித்து பசை செய்த
நினைவுகள் அங்கே

சிரட்டையிலெடுத்த
பசையுடன் சேர்த்து
அப்பாவின் கடையில் வாங்கிய
வானிஸ் பேப்பருமென
ஓயாத ஓவியமாக
விண்பறக்க வெகுநேர
அலங்கரிப்புக்கள் தீயாக
நடந்தேறிய தருணமது

புறப்படத் தயாரெனினும்...
முச்சை போடத் தெரியாது..
அண்ணா என இதற்கு மட்டும்
பாசத்துடன் என் அழைப்பு
முப்புறமும் சரிபார்த்து
சமனிலைகள் சரியழந்து
அவன் போட்டுத்தந்த முச்சையுடன்
தயாரானது என்பட்டம்

காலத்தின் அறிவியலில்
நான் ஏவப்போகும் கனாக்களின்
முதலாவது விண்கலம் அது....
இருந்த நூல்ளை எல்லாம்
சேர்த்து முடி போட்டு
வாலுக்கு சீலைகொண்டு
புறப்படத் தயாரானது அது



ஒரு நாள் பொழுது கடந்த
உழைப்பின் பயனறிந்து
மறுநாள் வான் பறக்க பயணமானது
மாஸ்டர் வளவு நோக்கி
முற்கல்லென அனைத்தும்
செருப்பின்றிய பாதம் முத்தமிட
ஓடத் தொடங்கியது என்னுடன்
ஆறேழு சோடிக்கால்கள்

பட்டத்தின் முதுகுப்புறம்
ஒருவன் பற்றியிருக்க
நூலை இழுத்து
முன் ஓடிச்சென்றது என்கால்கள்
காற்றுக் கணித்து வயர்கள்
விலத்தி கூடி நின்ற
நட்புகளின் ஆர்ப்பரிப்பில்
விண்தொட்டது என் முதற்பட்டம்

ஏதோ செவ்வாய்க்கு விண்கலமது
ஏவி விட்டோம் போல்
அளவில்லா சந்தோசம்...
கூடியிருந்தவர்களின் புன்னகைகள்
சொற்களில் கூட வரைவிக்க
முடியாத ஆனந்தமும் கூட
அன்று ஒரு நாள் நிறைவுதனில்

நினைவுகள் மீட்டிய படி பற்றிய
பட்டமது கையிலிருக்க
அண்ணா என ஒலித்த ஒரு
சிறுவனின் குரலால்
கதவைத்திறந்து கொண்டேன்
வெளிச்சென்று பார்க்க
செருப்பின்றி கால்களுடன்
என்னைப்போன்ற ஒருவன்

“அண்ணா இது என்ட பட்டம்”
என்றவாறு பயந்த குரலது
“பயப்பிடாத நான் தாறன்டா,
கொண்டு போ” என்று
என் குரல் மெலிதாக ஒலிக்க
சற்றே புன்னகையுடன்
வாங்கிக் கொண்டு ஓடிச் சென்றான்
அவன்

பற்றிய பட்டத்தைக் அவனிடம்
கொடுத்த நான்
மீண்டும் அப்பட்டம் என் வீட்டில்
விழுந்து விடாதோ
என எண்ணி மனதிற்கு அறிவால்
ஆறுதல் தந்து
வீட்டின் உள்நோக்கி புறப்பட்டேன்
வானம்பாடியாக......

*****



22

ஈழச் சூழலியல்

த.விதுர்ஷன்
மாணவன்
கொழும்பு பல்கலைகழகம்

## சுன்னாகத்து நீரின் அவலம்

ஒரு சில வருடங்களுக்கு முன்னர் மின் உற்பத்தி நிறுவனமொன்று தமது கழிவுற்பத்தியான ஒயிலினை உயரழுத்த அமுக்கத்தின் கீழ் நிலத்துக்குள் செலுத்தியதன் காரணமாக சுண்ணாகத்தை மையமாக கொண்ட பல கிலோமீற்றர் பரப்பளவில் பாரிய அளவில் நிலக்கீழ் நீர் மாசு படுத்தப்பட்டது. இது மனித ஆளுகைக்கு கீழான பாரிய பேரனர்த்தமேயாகும். இத்தாக்கத்தின் விளைவாக இன்றும் பார உலோகங்கள் கலந்த மாசாகிய நீரினை ஆயிரக்கணக்கான மக்கள் தெரிந்தும் தெரியாமலும் பயன்படுத்தி வருகின்றனர். அன்றைய சூழ்நிலையில் இவ்விடயம் வட, கிழக்கு ஊடகங்களின் கவனத்தைப் பெற்றாலும் தென்பகுதி ஊடகங்கள் தமது கவனத்தை வழங்கவில்லை என்பதே நிதர்சனமாகும். விடயம் அரசியலாக்கப்பட்டதே தவிர பாதிக்காப்பட்ட மக்களுக்கும், இயற்கை அன்னைக்கும் நியாயமான தீர்வு இன்றுவரை கிட்டவில்லை.

## வரப்போகிறது வெள்ளம்

இவ்வாறாகத்தான் வரலாறு காணாத வெள்ளப்பெருக்கினை எமது பகுதிகள் சந்தித்தன. இதற்குரிய காரண காரியங்களை நாம் முன்னைய தொடர்களில் ஆராய்ந்திருந்தாலும் நீர் மாசாக்கத்துக்கு கணிசமான பங்களிப்பை இவ்வெள்ள அனர்த்தங்களும் வழங்குகின்றன. முறையற்ற வடிகாலமைப்பு, குளங்களை தூர்வாறாமை போன்ற விடயங்கள் யாழ் மாநகரப்பகுதிகளில் சரி செய்யப்படுகின்றமை வருங்கால வெள்ள அனர்த்த வாய்ப்பை குறைக்கும் என எதிர்வு கூறினாலும், இவ்வருடம் வட பகுதியில் வழமையான மழைவீழ்ச்சி அளவை விட 20% அதிகமாக இருக்கும் எனக்கூறப்படுகின்றது. எனவே மக்கள் சிறந்த அனர்த்த முகாமைத்துவ ஆயுத்தங்களுடன் இருக்க வேண்டும்.

நீரை மாசடையச் செய்வன எனக் கருதப்படும் பொருட்கள் அடங்கிய நீண்டதொரு பட்டியல் உள்ளது. பொதுவான மாசுபடுத்திகளாவன நீரில் கரைந்துள்ள ஒட்சிசனை நுகரும் சேதனப் பொருட்கள், தொங்கலாகக் காணப்படும் அமோனியா, பொசுபரசு, எண்ணெய், கிறீஸ், மலக்கழிவுகள் என்பனவாகும்.



அமிலத் தன்மை, உவர்த் தன்மை, நைதரசன், நிக்கல், குரோமியம், ஈயம், ஆசனிக், யுரேனியம், கட்மியம், பாதரசம், சயனைட், ஐதரசன் சல்பைட், குளோரின், பெற்றோலிய ஐதரோகாபன்கள், பீடைநாசினிகள், அவற்றின் மீதிகள், கதிர் வீசும் அணுக்கள், ஆகியன ஏனைய மாசுபடுத்திகளாகும்.

அதிக வெப்பத்திலுள்ள நீர்நிலைகள், அடையல்கள், கலங்கற் தன்மை என்பனவும் மாசுபடுத்திகளாகக் கருதப்படுகின்றன. சாயமூட்டிகள், வெடிபொருட்கள், தீந்தைகள், பீடைநாசினிகள்,நிறப்பொருட்கள், பிளாஸ்டிக், மீச்சேர்மம் போன்ற பொருட்களும், ஏனைய பல பொருட்களையும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் திரவக் கழிவுகளில் காணப்படும், நீரை மாசடையச் செய்யும் சேதன, அசேதன இரசாயனங்களைக் கொண்ட 120 இற்கும் அதிகமான பொருட்களை ஐக்கிய அமெரிக்காவின் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை (EPA) வகைப்படுத்தியுள்ளது. இவற்றில் பெரும்பாலான இரசாயனங்கள் புற்றுநோயை உருவாக்கும், ஈரல், சிறுநீரகம் என்பனவற்றைச் சேதமாக்கும், மத்திய நரம்புத் தொகுதியை மோசமாகப் பாதிக்கும். எனவே இவை மனித ஆரோக்கியத்திற்கு மோசமான ஆபத்தினை ஏற்படுத்துவனவாகும். எல்.டி50 (LD50) என்னும் பெறுமானத்தை அடிப்படையாகக் கொண்டு, நீர் வாழ் உயிரினங்களின் உயிரியல் மருத்துவ ஆய்வு (bioassay) இலிருந்து கழிவுப் பொருட்களிற்கான நியமங்களை ஐக்கிய நாடுகளின் சுற்றாடற் பாதுகாப்பு அதிகாரசபை விருத்தி செய்துள்ளது.



மாசுபடுத்திகளை குறிப்பிட்ட காலத்திற்கு வெளிப்படுத்தும் போது பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட உயிரினங்களில் ஐம்பது வீதத்தினைக் கொல்வதற்கு அவசியமான செறிவே எல்.டி50 ஆகும். நீரில் மாசுபடுத்திகளை அனுமதிக்கக் கூடிய ஆகக் கூடிய அளவு இப்பெறுமானத்தின் (அதாவது எல்.டி50 இன்) 10% இற்கும் 1% இற்கும் இடைப்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

## வீட்டு மற்றும் நகர கழிவுகளால் நீர் மாசாக்கம்

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வீடும் பல்வேறு வகையான கழிவுப் பொருட்களை உருவாக்குகின்றன. இவை பத்திரமாக சேமித்துவைக்க வேண்டியளவிற்கு பெறுமதி வாய்ந்தனவாகக் கருதப்படுவதில்லை. இவை வீட்டுக் கழிவுகள் என அழைக்கப்படுகின்றன.

உதாரணமாக மீன் பொதி செய்யப்பட்டுள்ள தகரப் பேணியொன்றை திறந்து அதிலுள்ள மீனை நுகர்ந்த பின்னர், அத்தகரப் பேணி பாதுகாத்து வைக்க வேண்டியளவிற்கு பெறுமதியானதல்ல. உண்மையில், அதிலிருந்து விடுபடும் வரை தகரப் பேணி எமக்கு தொந்தரவான தொன்றாகும். இவ்வீட்டுக் கழிவுகளை விரைவாக பிரிந்தழியக்கூடியவை, அவ்வாறு விரைவாக பிரிந்தழிய முடியாதவை என இரண்டாக வகைப்படுத்தலாம்.

பாவனை, சமைத்தல் உண்ணுதல் ஆகிய சந்தர்ப்பங்களில் வீணாகும் விலங்கு, தானிய, பழங்கள், மரக்கறிகள் ஆகிய கழிவுகளை இலகுவாக பிரிந்தழியும் கழிவுகளாகக் கருதலாம். பிரிந்தழிய நீண்ட நாட்களெடுக்கும் அல்லது விரைவில் பிரிந்தழிய முடியாத பொருட்கள் கண்ணாடி, மட்பாண்டப் பொருட்கள், பிளாஸ்டிக், பெற்றோலிய கைத்தொழிலிருந்து பெறப்படும் உப விளைவுப் பொருட்கள், உலோகங்கள் என்பனவாகும். பொலித்தீன் பொருட்கள் பிரிந்தழிய முப்பது வருடங்கள் வரை எடுக்கும். கடதாசி, வன் அட்டைகள் (Cardboard), பொதி செய்யும் பொருட்கள், பலகை, ஆடைகள், நார் என்பனவற்றை இவையிரண்டிற்கும் இடைப்பட்டனவாகக் குறிப்பிடலாம்.

கிராமப்புறங்களில் வருமானம் குறைந்த வீடுகளில் உருவாகும் கழிவுகள் குறைந்தளவானதோடு, அவற்றில் பெரும்பாலானவை பிரிந்தழியக்கூடியவை. நகரப் புறங்களில் குறிப்பாக பணக்கார வீடுகளில் உருவாகும் கழிவுகள் அதிகளவானது மாத்திரமல்லாது, இலகுவில் பிரிந்தழியக் கூடியவையல்ல. ஒவ்வொரு வீடுகளிலிருந்தும் கழிவுகளை கிரமமான முறையில் உள்ளூராட்சி நிறுவனங்கள் அல்லது ஏனைய பொது நிறுவனங்கள் அகற்ற முடியுமாயின் ஆகக்குறைந்தது அந்தப் பகுதியிலுள்ள வீடுகளிலாவது கழிவுகளை அகற்றுவது பிரச்சினை இல்லாது போகலாம்.

இருந்தபோதிலும், பெரும்பாலான ஏழை நாடுகளில் இவ்வாறான சேவைகள் வழமையாகக் கிடைப்பதில்லை. இதன் விளைவாக ஒவ்வொரு குடும்பமும் ஏதோவொரு வகையில் தமது வீட்டுக் கழிகளை அகற்ற வேண்டும். சிறிய எண்ணிக்கையான குடும்பங்கள் தமது வீட்டு வளவிலேயே இலகுவில் பிரிந்தழியக் கூடிய பொருட்களை குழி தோண்டி புதைத்து விடுகின்றனர். ஏனைய வீடுகளில் தமது எல்லைகளில் அவற்றை வீசி விடுகின்றனர், சிலர் பாதையோரங்களில் வைத்து விடுகின்றனர், இன்னும் சிலர்



வேலைக்கு செல்லும் போது யாரிற்கும் சொந்தமில்லாத இடங்களில் அவற்றை கைவிட்டு சென்று விடுகின்றனர், ஏன் சில வேளைகளில் ஆறு போன்ற ஓடும் நீரில் கூட வீசி விடுகின்றனர். தமது வசிப்பிடங்களைக் கவனத்திற் கொள்ளும் போது பொதுமக்களின் பார்வையில் படாதவாறு கழிவுகளை வீசி விடுவதன் மூலம் தமது சமூகப் பொறுப்பை தாம் நிறைவேற்றி விட்டதாகக் கருதுகின்றனர்.

பெரும்பாலான வீட்டு, நகரக் கழிவுகளில் பெருமளவானவற்றை உருவாக்குவோர் அவற்றை நிலத்தின் மேற்பரப்பில் கைவிட்டுவிடுகின்றனர். இவை நேரடியாக மழையினால் அல்லது கடும்செறிவான மழையினால் ஏற்படும் வெள்ளத்தினால் அடித்துச்செல்லப்படும் போது இக்கழிவுகள் நீருடன் கலக்கின்றன. இவ்வாறு மாசடைந்த நீர் இறுதியாக கிணறுகள், அருவிகள், ஆறுகள்,குளங்கள், ஏரிகள் நீர்த்தேக்கங்கள் மற்றும் சமுத்திரத்தை அடைகின்றன.



ஆராய்வோம்.....





சிங்கை நகரில் வாழும் திருவாளர். கோ.மோகன்ராசு அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சைவ வித்யா விருத்திச் சங்க சிறுவர் இல்ல சிறுவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

அவர் தமிழ் போல் வாழ வாழ்த்துகிறோம்.








**இ.தனிஸ்ரன்**

அப்பொழுது ஐந்தாம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கிறேன். தமிழ் சினிமாவில் குத்துப்பாடல்கள் பிரபலமாக இருந்த காலம். Fast beat songs பிடித்த எனக்கும் சரி அன்றைய சிறுவர்களுக்கும் சரி குத்துப்பாடல்கள் என்றால் சந்தோஷம்.

அந்த நேரம் 4 students என்ற மலையாள திரைப்படம் தமிழிலும் வெளிவந்தது. படம் திரைக்கதையினால் அதிகம் பேசப்பட்டதோடு படத்தின் பாடல்கள் பட்டிதொட்டியெல்லாம் எதிரொலித்தது. கல்யாண வீடு, சாமத்திய வீடு, குடிபூரல் என்று என்ன மங்களவிழா என்றாலும் 4 students பாடல்கள் இருக்கும். இரண்டு பாடல்கள் பிரபலம். இரண்டும் ஒரே ராகம், ஒரே பீட். இசையில் சின்ன சின்ன வித்தியாசங்கள் இருக்கும். ஆனால் வரிகள் வேறு வேறு.

ஒன்று பழநிபாரதி எழுதிய,
**‘அன்னக்கிளி நீ வாடி என் காதல் சீட்டெடுக்க’**

மற்றது நா.முத்துக்குமார் எழுதிய,

**‘லஜ்ஜாவதியே என்னை அசத்திற ரதியே’**

இரண்டும் இன்றை வரை என்னுடைய ஃபேவரைட்.

படத்தின் இசையமைப்பாளர் “ஜெசியா ஜிப்ட்“ தான் இரண்டு பாடல்களையும் பாடியிருந்தார். இரண்டு பாடல்களுமே பிரபலம் என்றாலும் ” லஜ்ஜாவதியே” என்ற சொல்லில் இருந்த கவர்ச்சியும் தொடரும் வரிகளில் இருந்த சிறுவர் கால நினைவு மீட்பும் சேர்ந்து ”லஜ்ஜாவதியே” க்கு தனி அழகு சேர்த்தது.

**//பூவரச இலையிலே
பீப்பீ செஞ்சி ஊதினோம்//**

பூவரசம் இலை பீப்பியிலேயே பாடல்கள் வாசித்த என் நினைவுகளை அதிகம் மீட்கும் வரிகள் இது. நாங்கள் பூவரசு இலையில் பீப்பி ஊதினால், சுருட்டடிக்கும் கிழடுகள் சுறுட்டோடு இளம் வாடலான பூவரசு இலையை சுத்தி அடிப்பார்கள். இன்றும் எங்கு பூவரசம் இலையை



கண்டாலும் சுருட்டி பீப்பி ஊதுவதில் ஒரு அலாதி இன்பம்.

**//பள்ளிக்கூடம் பாடம் மறந்து பட்டாம்பூச்சி தேடினோம்//**

பள்ளிக்கூடம் முடிய, வீடு வரை நடந்து செல்லும் போது, மதில்களில் ஒட்டியிருக்கும் தும்பிகளை பிடிப்பது தான் எங்கள் விளையாட்டு. தும்பி பிடிப்பது தனித்திறமை. பதுங்கி போய் கவனமாக பொத்தி பிடிக்க வேணும். கை போகும் வேகத்தில் தும்பி பறந்திடும். சில சமயம் பிடிக்கும் போது அதன் ஒரு சிறகு உடைஞ்சிடும். பாவம் கிடந்து துடிக்கும். வடிவா ஒரு தும்பியை பிடிச்சிட்டா, அதோட வாலிலை நூ லைக்கட்டி பறக்கவிடுறது கொஞ்சம் பறக்க, இழுக்கிறது. இதே வண்ணத்துப்பூச்சிகளை பிடிப்பது கஷ்டம். அப்படி பிடிக்கும் போது அதன் சிறகின் வர்ண ஜாலங்கள் கைகளிலும் ஒட்டிக்கொள்ளும்.

சில நண்பர்கள் தும்பியை பிடித்து அதன் இறகுகளை வேண்டுமென்றே உடைத்து அது துடிப்பதை பார்த்து சந்தோஷப்படுவார்கள். இது



பொறுக்காமல் தும்பி பிடிப்பதிலிருந்து ஒதுங்கிக் கொண்டவன் நான்.

**//தண்ணிப்பாம்பு வரப்பில் வர தலை தெறிக்க ஓடினோம்//**

மழைகாலங்களில் வயலில் உள்ள கிணறுகள் எல்லாம் நிறைந்து "நீர்க்கோத்தை" எனப்படுகிற நீர்ப்பாம்பு வெள்ளத்தோடு கிணற்றிலிருந்து வெளியில் வரும். வந்தவர் வரம்பு விளிம்புகளில் ஒளிந்திருக்கும். தண்ணியில் மூழ்கி இருக்கும் வரம்புகளில் கால் வைத்தால், நீர் சலசலப்புக்கு பாம்புகள் பயந்து ஓடும். அதை பார்த்து நாங்கள் பயந்தோடுவம். சின்னனோ பெரிசோ விஷமோ இல்லையோ அது பாம்பு தானே!

**//பனங்காயின் வண்டியில் பசு மாட்டு தொழுவத்தை சுற்றி வந்து பாம்பேக்கு போனதாக சொல்லினோம்//**

இது இந்திய மண் சார்ந்த சிறுவர் விளையாட்டு ஒன்றை சுட்டும் வரிகள். இந்த வரிகள் எனக்கு " குலை குலையா முந்திரிக்கா" விளையாட்டை ஞாபகபடுத்தும்.

**'குலையா குலையா முந்திரிக்காய்
நரியே நரியே சுற்றி வா
கொள்ளையடிப்பவன் எங்கிருக்கான்
கூட்டத்திலிருக்கான் கண்டுபிடி'**

இப்படி பாடிக்கொண்டே விளையாடிய ஒரு காலம் இருந்தது.

//அடடா வசந்தம்
அதுதான் வசந்தம்
மீண்டும் அந்த காலம் வந்து
மழலையாக மாற்றுமா//



சிறுவர்களாய் இருந்த போது செய்த குறும்புகளும் குழப்படிகளும் நினைவுகளில் என்றுமே பசுமையானவை. அதற்கு எல்லைக் கோடுகள் இல்லை. கவலைகள் இல்லாத மனம். கபடம் அறியாத குணம்.

//காவேரி நதியிலே
தூண்டில்கள் போட்டதும்
கண்ணே உன் தூண்டில் முள்ளில்
குட்டி தவளை விழுந்ததும்
கை கொட்டி கேலி செய்த
ஞாபகங்கள் மறக்குமா//

தூண்டில் பாவனை எங்களிடம் அதிகம் இருந்ததில்லை. யாரும் குளங்களில் மீன் பிடிக்கும் போது பார்த்தது மட்டும் தான். ஆனால் இங்கே மீனுக்கு பதிலாக தவளை பிடித்தது போல, மழை வெள்ளத்தில் "மீன் குஞ்சு" பிடிக்க போய் அதே தவளைக்குஞ்சுகளான "வாற்பேய்" களை பிடித்து வந்திருக்கிறோம் பெரியவர்கள் நக்கல் அடிக்க, நமக்கு அவமானமாகிவிடும்.

//லஜ்ஜாவதியே என்ன அசத்துற ரதியே//

அதென்ன லஜ்ஜாவதி? என்ன அர்த்தம் இதற்கு?

"லஜ்ஜை" என்றால் வெட்கம். சிங்களத்தில் "லஜ்ஜாவ" என்று சொல்வார்கள். "வெட்கப்படும் பெண்" என்பதால் லஜ்ஜாவதி.

//ராட்சசியோ தேவதையோ
ரெண்டும் சேர்ந்த பெண்ணோ
அடை மழையோ அனல் வெயிலோ
ரெண்டும் சேர்ந்த கண்ணோ//

பெண்ணின் அழகு கண். கண்ணில் அவள் காட்டும் பாவங்களுக்கு மழை, வெயில், பௌத்தம், சமணம், தூண்டில், கத்தி, அணுகுண்டு என்று ஓராயிரம் வர்ணனைகள்.

காதலால் காதலாள் பார்வை காந்தமாய் கவரும் காந்தாள்.

"கடவுள் பூமி வந்தால்
உன் கண்ணை பார்க்க வேண்டும்
மனிதன் பாவம் என்று
அவன் மறைந்து போக வேண்டும்"

இரண்டு பால்ய கால சிறுவர்கள் நண்பர்களாக இருந்து காதலர்களாக வளரும் பாடலே என்றாலும் நினைவுகள் யாவருக்குமானதே!

//தொட்டவுடன் ஒடுறீயே
தொட்டாச்சிணுங்கி பெண் தானோ//

வயல் வாய்க்கால் கரையிலும் குளக்கட்டிலும் இருக்கும் தொட்டாச்சிணுங்கியை கைகளாலும் கால்களாலும் தொட்டு தொட்டு சுருங்க வைப்பதும் அது சிணுங்குவதை பார்த்து சந்தோஷம் அடைவதும் இந்த சிறுவனுக்கும் பிடித்தமானது.

படத்தில் இருந்த மற்றைய பாடல்,

'அன்னக்கிளி நீ வாடி என் காதல் சீட்டெடுக்க
நெல்லுக்கு பதிலாக முத்தங்கள் நான் கொடுக்க'

கிளி ஜோசியம் போல் தன் காதலுக்கு பதில் சொல்ல வடிவான கிளியான தன் காதலியை அழைக்கிறான். வண்ணக்கிளிக்கு நெல் மணிகளுக்கு பதில் பல்மணிகள் கொறிக்கும் முத்தம் தருவதாக கூறுகிறான் காதலன்.

அப்பொழுது எங்களுக்கு வரிகளின் அர்த்தம் எதுவும் புரியவில்லை. ஆனால், ஊரில் "பொன்னுக்கிளி" என்ற ஒருவர் இருந்தார். நல்ல உயரம், திடகாத்திரமான உடம்பு, நல்ல கறுவல். எப்பவும் பல்லு தெரிய சந்தோஷமாக சிரிக்கும் முகம். சண்டிக்கட்டு கட்டின சாறம். சிலநேரம் தோளில் ஒரு துவாய். மற்றும்படி வெறும் மேலோட தான் திரிவார்.

நாங்கள் பாடசாலை முடித்து வீடு வரும் வழியில் தான் அவரது வீடு. சரியாக பாடசாலை முடிந்து வரும் போது அவரை காணுவம். வயலில மாடு அவிட்டுக்கொண்டோ, மாட்டுக்கு கஞ்சி கொண்டோ இல்லை இறைஞ்சுப்போட்டோ வருவார்.

இந்த பாடல் பிரபலமாய் இருந்ததால், அன்னக்கிளிக்கு பதில் பொன்னுக்கிளி என்று மாற்றி பாடிவிட்டு ஓடுவம். அவர் சிரிச்சிட்டே போவார். எங்கட பாட்டு,

'பொன்னுக்கிளி நீ வாடா என் காதல் சீட்டெடுக்க
நெல்லுக்கு பதிலாக சணல் போட்டு சூடடிக்க'

ஒரு காலம் இருந்தது.

'அது ஒரு அழகிய நிலாக்காலம்
கனவினில் தினம் தினம் உலா போகும்
நிலவுகள் சேர்ந்து பூமியில் வாழ்ந்ததே
அது ஒரு பொற்காலம்'



1

# மலையக மக்களும் குடியுரிமைப்பிரச்சினையும்

மு.சிவலிங்கத்தின் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு



**ராசலிங்கம் கனகேஸ்வரி**

ஈழத்து இலக்கிய வரலாற்றைப் பொறுத்தவரையில் 19ஆம் நூற்றாண்டு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாகக் கொள்ளப்படுகின்றது. இக்கால ஆங்கில ஆட்சியானது பல்வேறு வகையிலும் சிறப்பு பொருந்தியதாக அமைந்திருந்தது. இக்கால கட்டத்திலேயே பெருந்தோட்டப் பயிர்செய்கையின் பொருட்டு பல பாகங்களில் இருந்தும் மக்கள் கூலிகளாக வரவழைக்கப்பட்டனர். அவர்களின் கடினமான உழைப்பால் இலங்கை தேசம் வலுவும் வனப்பும் பெற்றது. இவ்வாறு கூலிகளாக அழைத்து வரப்பட்டவர்களே இன்று மலையகச் சமூகம் என்றொரு தனிச் சமூகமாக வாழ்ந்து வருகின்றனர்.

சுமார் இருநூறு ஆண்டுகளாக இம் மக்கள் எதிர்கொண்ட இன்னல்கள் எண்ணிலடங்காதவை. இவர்கள் கூலிகளாக மட்டுமன்றி அடிமைகளாகவும் நடத்தப்பட்டமையானது மிகப் பெருந்துயரச் சம்பவமாக மட்டுமன்றி இன்று வரை ஆறாத வடுவாக அமைந்திருக்கின்றது. இவர்களின் உழைப்பால் ஆங்கிலேயர்கள் மட்டுமல்ல இலங்கை நாடும் பல்வேறு நன்மைகளைப் பெற்றது. ஆனால் இலங்கையின் சுதந்திரமானது இவர்களை சுதந்திரமற்றவர்களாக மாற்றியது. அதுவரை காலமும் தன் மொத்த உழைப்பையும் இந்நாட்டுக்காக வழங்கிய இவர்களில் பலர் நாடு கடத்தப்பட்டனர்.

சுதந்திர இலங்கையின் சுதந்திர மற்றவர்களாக ஆக்கப்பட்ட இவர்கள் இரண்டு நாடுகளுக்கு இடையில் பங்கிடப்பட்டனர். 1948ஆம் ஆண்டு 18ஆம் இலக்க குடியுரிமை சட்டம் மலைநாட்டு மக்களின் வாழ்க்கையையே கேள்விக்குட்படுத்தியது. சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் விளைவால் இம் மக்கள் பண்டங்களாகக் கருதப்பட்டு இரண்டு நாடுகளுக்கு மிடையே பங்கிடப்பட்டனர். இது இவர்களின் துயர வரலாறு. இதனை ஒரு சரித்திரமாக எங்கும் காண முடியாது.

ஆனாலும் ஈழத்து மலையக இலக்கியங்கள் இவர்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளைப் பதிவு செய்வதாக அமைந்துள்ளன. மலையக எழுத்தாளர்கள் பலர்



மலையக மக்களின் பிரச்சினைகளைத் தங்களது எழுத்துருவின் மூலம் வெளிகாட்டுகின்றனர். மலையக மக்களின் குடியுரிமைப் பிரச்சினை பற்றி பல சிறுகதை எழுத்தாளர்கள் முன்வந்து எழுதியுள்ளார்கள். அவர்களுள் மலையக மக்களின் உணர்வுகளைப் புரிந்து அவர்களின் நிலையினை வெளியுலகிற்கு காட்டும் வகையில் சிறுகதைகளை எழுதுபவராக மு.சிவலிங்கம் காணப்படுகின்றார்.

மு.சிவலிங்கம் சிறுகதை உலகில் தனக்கென ஒரு தனிப்பாதையை வகுத்துக் கொண்டவர். இவர் மலையக மக்களின் பிரச்சினை களைக் கலைப்பாங்குடன் எள்ளலும் எரிச்சலும் ஒருங்கே தோன்றும் வகையில் எழுதியுள்ளார். இவர் தனது சிறுகதைகளில் பல பிரச்சினைகள் பற்றி பேசியுள்ளார். இவற்றுள் மலையக மக்களுடைய குடியுரிமைப் பிரச்சினை பற்றிய ஒரு தெளிவான பார்வையை தனது சிறுகதைகளில் முன்வைத்துள்ளார். அதனால் மனதளவில் மலையக மக்கள் கொண்ட துன்பங்களையும் தனது சிறுகதைகளில் உணர்வு பூர்வமாகப் பதிவு செய்துள்ளார்.

மலையக மக்களின் குடியுரிமை பிரச்சினைப் பற்றி பேசும் இவருடைய சிறுகதைகளாக பேப்பர் பிரஜைகள், மதுரகீதம், ஆயிரத்து தொளாயிரத்து நாற்பத்தெட்டு, ஒப்பாரிக் கோச்சி முதலான சிறுகதைகள் அமைந்துள்ளன. இச்சிறுகதைகளினூடாக மலையக மக்களது குடியுரிமை பிரச்சினை



பற்றிய பார்வையினை எவ்வகையில் வழங்கியுள்ளார் என்பது பற்றி நோக்கும் போது "மலைகளின் மக்கள்" எனும் தொகுதியில் இடம் பெற்றுள்ள முதலாவது சிறுகதையாக "பேப்பர் பிரஜை" என்ற சிறுகதை அமைந்துள்ளது.

1948ஆம் ஆண்டில் பிரஜாவுரிமை மறுக்கப்பட்ட இம் மக்களுக்கு 1957இல் தற்காலிக பிரஜாவுரிமை சான்றிதழ் வழங்கப்பட்டது. இதனை அவர்கள் எந்த நேரமும் கையில் வைத்திருக்க வேண்டும் என பணிக்கப்பட்டிருந்தனர். இதனை தொலைத்தாலோ அல்லது கிழித்தாலோ மீண்டும் வழங்கப்பட மாட்டாது என்ற சட்டமும் பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்த தற்காலிக் பிரஜாவுரிமை பத்திரத்தை தொலைத்த ஒரு மலையக சமூகத்தைச் சேர்ந்தவனுக்கு அரசாங்க வேலை இல்லாமல் போகின்றது என்ற கருவினைக் கொண்டு இந்தச் சிறுகதை உருவாக்கப்பட்டுள்ளது.

ஒரு சாதாரண தோட்டத் தொழிலாளியின் மகனான சுப்பையா பெரும் சிரமங்களுக்கு மத்தியில் படித்து ஒரு தொழிலிற்காகக் கொழும்பிற்கு பயணமாகின்றான். இப் பிரஜாயுரிமை என்ற ஒன்றால் ஒரு சமூகத்தின் கனவே கலைக்கப்படுகின்றது.

"இந்த நாட்டு பிரஜைக்குத்தான் இந்த வேலையை வழங்க முடியும் உங்களை இந்த நாட்டு பிரஜையென்று நிரூபிக்க தகுந்த சான்றுகள் போதாது" என்ற உயர் அதிகாரியின் வார்த்தைகளானது 200 வருடங்களுக்கு மேற்பட்டு வாழும் ஒரு சமூகத்தின் இருப்பையே கேள்விக்குள்ளாக்குவதாக அமைகின்றது.

ஒரு நாட்டில் ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக வாழ்பவர்களுக்கு அந்த நாட்டின் பிரஜாவுரிமை வழங்கும் போது இத்தனை ஆண்டுகளாக வசிக்கும் இம் மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதில் இந் நாட்டு அரசாங்கம் சுயநலமாக செயற்பட்டுள்ளமையினை இதனூடாக அறியக் கூடியதாக உள்ளது.

"நான் ஒரு பேப்பர் பிரஜை, பதிவு பிரஜை இந்த பிரபஞ்சத்திலேயே கடதாசி பிரஜைகள் என மகுடம் சூட்டப்பட்டு அவமானப்படுத்தப்பட்டு கொண்டு இருப்பவர்கள்தான் என் பரம்பரை" என்ற சுப்பையாவின் எண்ணம் ஒட்டு மொத்த மலையகச் சமூகத்தின் குரலாகவே அமைந்துள்ளது. இச் சிறுகதை குடியுரிமைப் பிரச்சினையால் தாழ்த்தப்பட்ட ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்குத் தடை கல்லாக இருப்பதனையும் அதன் விளைவால் அம்மக்களுக்கு ஏற்படும் மன



உளைச்சல்களையும் தருவததாக அமைந்துள்ளது.

“மலைகளின் மக்கள்” என்ற இத்தொகுதியிலே அமைந்த மற்றுமொரு சிறுகதையாக “மதுர கீதம்” என்ற சிறுகதை அமைந்துள்ளது. இச்சிறுகதை சிறுவயது முதல் காதலித்து வரும் இரண்டு உள்ளங்கள் இக் குடியுரிமை பிரச்சினை காரணமாகப் பிரிந்து செல்வதனைக் காட்டுவதாக அமைந்துள்ளது. இச் சிறுகதையில் வரும் சீனிக்கும் மாரிகுட்டிக்கும் மங்களப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. இதற்கிடையில் வந்த பிரிவு பற்றி ஆசிரியர் அழகாக எடுத்துக்காட்டுகின்றார்.

“நாட்டின் குடிமக்கள் என்ற ஒரு உடலை இனத்தாலும் மொழியாலும் பிளவுபடுத்திக் கூறுபோட்டு பங்கு பிரித்துவிட்டது அரசு என்ற ஒரு சக்தி” இதனால் மாரிக்குட்டியின் குடும்பம் இந்தியா செல்ல வேண்டிய நிலை உருவாகியது.

“சீனி மாமா சீனி மாமாவோ..!
மாரி பொண்ணு என் உயிரே..! ”

என்ற இவர்களுடைய வரிகள் கடலின் கொந்தளிப்பை விட மனதின் கொந்தளிப்பு அதிகமானது என்பதைக் காட்டுவதாக அமைந்துள்ளது. இவ் வகையில் இக் குடியுரிமைப் பிரச்சினையால் நினைத்தவரோடு வாழ முடியாமல் மனச்சுமையோடு வாழ வேண்டிய மக்களின் மனநிலையினை எடுத்துக்காட்டியுள்ளார். ஆனால் இறுதியில்

“ஆத்துக்கு அந்தபுறம் காக்கா.. ”

என மாரி பாட அது சீனிக்கு இழவுக் குரலாக இருந்தது. ஆனால் மாரி மனதால் அவனுடன் செல்வதால் அவளுக்கு மதுர கீதமாக இருக்கின்றது.

தொடரும்...

## ஊசி இல்லாத சிரிஞ்ச் கண்டுபிடிப்பு

நெதர்லாந்து ஆராய்ச்சியாளர்களால் ஊசி இல்லாத, செலுத்தும் போது வலி தெரியாத, லேசர் தொழில்நுட்பத்தினாலான சிரிஞ்ச் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. திரவநிலையில் உள்ள மருந்தானது லேசர் கதிரினால் சூடாக்கப்பட்டு நீர்க்குமிழியாக மாற்றப்பட்டு மணிக்கு 100 கி.மீ க்கு அதிகமான வேகத்தில் தோலில் உள்ள நுண்துளைகள் ஊடாக உடலினுள் செலுத்தப்படுகிறது. இதன்போது ஊசி செலுத்தியதற்கான எந்தவொரு அடையாளமோ வலியோ ஏற்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஜீவா ஷஜீவனின்

# சிங்ககிரித்தலைவன்

ஆட்சி 34

## நழுவிய காவி!

மாந்தைத் துறைமுகம் கடல் அலைகளின் அரவணைப்பால் நிறைந்து கிடந்தது. சிறு வளங்களும் கடலோடிகளின் வத்தைகளும், தூரத்தே கடலில் பெரிய மரக்கலங்களுமாகத் துறைமுகப் பகுதி எங்கும் வணிகர் கூட்டமும் வணிகப் பொருட்களும், பரவிக்கிடந்தது. அரேபிய நாடுகளில் இருந்து வந்த வர்த்தகர்களை கடலோடிகளின் சிறுவர்கள் வியப்பாகப் பார்த்துக்கொண்டு அவர்கள் பின் போயினர். யாழ்ப்பாண ராசதானியின் காவலர்கள் காவல் செய்ய, மாந்தைக்கடலில் முக்குளித்த முத்துக்களைத் தரம் பிரிக்கும் பணி பிரத்தியேக ஆறுகால்மண்டபம் ஒன்றில் இடம்பெற அதை ஆவலுடன் வெளிநாட்டு வர்த்தகர்கள் பேரம் பேசத் தயாராகிக் கொண்டிருந்தனர்.

மறுபுறத்தில் உப்பிட்டு பதனிடப்பட்ட மீன்கள் கருவாடாகுவதற்காகக் காயவிடப்பட்டிருந்தன. அந்தப்பெரிய பெரிய மீன்களைக் கச்சணிந்த பெண்கள் பறவைகளிடம் இருந்து காத்து நின்றனர். பனையோலைப்பாய்களில் காய விடப்பட்டிருந்த கருவாடுகளை சில வெளிநாட்டு வர்த்தகர்கள் பார்த்துக்கொண்டு தமக்குள் ஏதோ பேசிக் கொண்டும் இருந்தார்கள்.

யாழ்ப்பாண அரசுக்கு செல்வத்தை வாரி வழங்கிய மாந்தைத் துறைமுகம் நாள் முழுதும் பரபரப்பாகவே இருக்கும். அதே நேரம் கடல் கண்காணிப்பும் வரி அறவீடுகளும் முறையாக இடம்பெறும். அந்தத் துறைமுகத்தினூடாக செல்லும் அனைவரும் தமக்கான தொகையை அரசுக்கு செலுத்த வேண்டி இருந்தது. ஆனால் துறவிகளுக்கும் அரச வம்சத்தவர்களுக்கும் அது விலக்களிக்கப்பட்டது.

இப்போதும் ஒரு பௌத்த துறவி தன் சீடர்கள் சிலருடன் ஒன்றாகத் துறைமுகத்துக்குள் நுழைகின்றார். ஆனால், துறவிகளுக்கு உரிய நடையோ அமைதியோ அடக்கமோ அவரிடத்தில் சற்றும் இல்லை! அவருடைய நடையில் ஒரு கம்பீரம் அவருடைய கண்களில் அருளுக்குப் பதிலாக ஆவேசமும் அங்கலாய்ப்பும் நிறைந்திருந்தது! புதிதாக சவரம் செய்யப்பட்ட தலை தாடி என்பவற்றிற்கான அடையாளங்களாக குறித்த பகுதிகளில் ஏற்பட்டிருந்த சில காயங்கள் குறிகாட்டின. புதிய காவியாடையும், பிச்சாபாத்திரமும் இவர் ஒரு புதிய துறவி என்பதை வெளிச்சம் போட்டுக்காட்டின. ஆனால் அவர் முகம் மட்டும் எப்போதோ நாம் பார்த்த முகம் போலவே இருந்தது.

புதிதாக தலை முடியையும் தாடியையும் மழித்துக் கொண்டதால் பழகிய முகமாக இருந்தாலும் அது நமக்கு தெரியாமல் இருப்பதில் ஆச்சரியமில்லை.

கிடுகிடுவெனச்சென்ற அந்தத் துறவிகள் கூட்டம் ஒரு கூடாரத்தின் அருகில் போனதும் அந்தக்கூடாரத்தில் இருந்து வெளியே வந்த ஒருவன் ஒரு தண்டத்தை துறவியின் கையில் கொடுத்தான். அத்தோடு ஒரு ஓலையும் சுற்றப்பட்டிருந்தது. அதை வாங்கிக்கொண்ட துறவியை ஒரு ஏவலாள் அழைத்துச்சென்று ஒரு வத்தையில் ஏற்றி விட்டான். அந்த வத்தை கடலை நோக்கி பயணிக்கத் தொடங்கியது.

சற்று தூரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெரிய மரக்கலத்துக்கு அருகில் அந்த வத்தை சென்றதும் மரக்கலத்திலிருந்து ஒரு கயிற்று ஏணி கீழே இறக்கப்பட்டது. அத்தனை பௌத்த துறவிகளும் மிக லாவகமாக கைதேர்ந்த வீரர்களைப் போல அந்த கயிற்றை பிடித்து மரக்கலத்தில் ஏறினார்கள்! அவர்களுக்கு கை கொடுத்து ஏற்றி விட்ட ஒருவன் கட்டுடல் வாய்க்கப்பெற்ற கடலோடி போன்று காட்சியளித்தான்!

உள்ளே ஏறியதும்

“வரவேண்டும் மல்லா! வர வேண்டும்! அப்படியே அச்சு அசலாக ஒரு துறவியை போலவே இருக்கிறாயே! நீ சிறந்த வில்லாளி மட்டுமல்ல! சிறந்த வேடதாரியும் கூட! உன்னை மன்னர் எதற்காக தன் நம்பிக்கைக்கு பாத்திரமாக வைத்திருக்கிறார் என்பதை இப்போதுதான் உணர்ந்து கொள்கிறேன்!”

அடடா! சிங்ககிரியின் அடிவாரத்தில் எமக்கு அறிமுகமான மல்லன் தான் இந்தத் துறவி!

இது ஆசைகளைத் துறந்து ஏற்ற துறவறம் அல்ல! ஏற்கனவே துறவறம் துறந்த மகாநாமரை உயிரையும் துறக்கச் செய்வதற்காக காசியப்பனால் திட்டமிடப்பட்டு வழங்கப்பட்ட துறவறம்!

“நாகா! நலமா? மகாநாமரின் தலையுடன் தான் மீண்டும் உன் கலத்தில் ஏறி இலங்கை வர வேண்டும் என்று தளபதியார் கட்டளையிட்டுள்ளார். உனக்கு மட்டுமே தெரிந்த இந்த ரகசியம் வெளியில் கசியக்கூடாது கவனம்!”

“மல்லா” உன்னைப்போல் நானும் மாமன்னர் காசியப்பரின் விசுவாசி தான்! அவரின் புரட்சிப் படையை வழிநடாத்தியதற்காகத்தானே என்னை இந்த மரக்கலத்தின் தலைவனாக என் ஆசைப்படி அவர் மாற்றினார்! இந்த செல்வச் செழிப்பும் இந்த மரக்கலமும் அவர் எனக்கு கொடுத்த வெகுமானம்! இதை ஆயுள் உள்ளவரை நான் மறக்க மாட்டேன்! அவர் அனுப்பிய ஓலைப்படி உன்னைப் பாண்டி நாட்டின் கீழக்கரைக்கு அழைத்துச் செல்வதே என் வேலை! ரகசியம் எப்போதும் பேணப்படும்! உன் முயற்சி வெற்றி பெற என் வாழ்த்துக்கள்!”

வெற்றி இறுமாப்புடன் ஒருவரின் கையை ஒருவர் பற்றிக்கொண்டு பலமாகச் சிரித்தார்கள்!

அந்தச்சிரிப்பின் சத்தம் காற்றோடு கலந்து கடலில் மிதந்தது!


“மல்லா மாமன்னர் காசியப்பர் சிங்ககிரி என்கின்ற ஒரு குன்றத்தை தன் இருப்பிடமாக மாற்றிக் கொள்ள முயற்சி எடுத்திருக்கிறாராமே!! அனுராதபுரத்தில் இருந்து கூட்டம் கூட்டமாக மக்கள் அங்கு படையெடுத்து கொண்டிருப்பதாகவும் கேள்விப்பட்டேன். நாடு புதிய தலைநகரத்தோடு, அரச படை வீரர்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் மாற்றங்களுக்கு உள்ளாகிறதாமே? இனி உன்பாடு கொண்டாட்டம் தான்!”

காவியுடையில் இருந்த மல்லனின் தோளை தட்டிக்கொடுத்தான் நாகன்!

இந்தக் கலத்தலைவன், நாகன் காசியப்பன் தன் தந்தைக்கு எதிராகப் புரட்சிப்படையை ஒழுங்கு படுத்திய போது அவனோடு உடனிருந்து புரட்சிப் படையை வழிநடத்திய ஒரு தளபதி!

மாமன்னர் தாதுசேனரின் படை அணி ஒன்றின் தலைவனாக இருந்தபோதும் காசியப்பன் மீது கொண்ட பற்றின் காரணமாக அப்போது அவனுக்கு உதவியிருந்தான்! அந்த நன்றிக் கடனுக்காக காசியப்பன் இவன் விரும்பியது போல இவனை வணிகம் செய்ய அனுமதி வழங்கி, நாட்டுக்குச் சொந்தமான பெரிய மரக்கலம் ஒன்றையும் இவனுக்கு வெகுமானமாக வழங்கியிருந்தான்!

“என்ன நாகரே! அவசரப்பட்டு தளகர்த்தர் பதவியை விட்டு விட்டு வணிகம் செய்யப்புறப்பட்டு விட்டோமே என்று கவலைப்படுகிறீரா? மன்னரோடு இருந்திருந்தால் சுகபோக வாழ்வு வாய்த்திருக்கும்.”



என்று மல்லன் கூறி முடிப்பதற்குள் நாகன் பலமாக சிரித்தான்!

“யுத்தத்தை வெறுப்பவன் நான்! நிலையான ஒரு நாட்டில் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும் அதை எப்போதாவது ஒருநாள் இழக்க வேண்டி ஏற்படும்! அசையும் இந்த மரக்கலாமே என் நாடு! சுகபோகம் இலங்கை நாட்டில் மட்டுமல்ல! இந்த மரக்கத்திலும் இருக்கிறது!”

என்று மரக்கலத்தின் மேற்றளத்தின் உள்ளே மல்லனையும் மற்றவர்களையும் அழைத்துச் சென்றான்! உள்ளே ஒரு அரண்மனையை போல அலங்கரிக்கப்பட்டிருந்தது! ஆடல் அழகிகள் சிலர் இவர்களின் வரவால் எழுந்து நின்று வணங்கி நின்றனர்! விழி அகல உள்ளே தன் பார்வையால் துலாவிய மல்லனின் கண்கள் அந்த அழகிகளில் போய் குத்தி நின்றன!

“ரசனை மிகுந்தவர் தாங்கள் என்பதை நிரூபித்துவிட்டீர்கள் நாகரே!”

மல்லனின் தோளில் இருந்து காவியுடை மெல்ல நழுவி விழுந்தது! கலம் இதமாக அங்கும் இங்கும் அலைகளால் தாலாட்டப்பட்டு மிதந்து கீழக்கரையை நோக்கி மிதந்து கொண்டிருந்தது!

**இன்னும் நகரும்...**

## உலகின் மிகப் பெரிய ராட்டினம் ஐக்கிய அரபு அமீரகத்தில் திறப்பு



துபாயில் உலகின் மிகப்பெரிய மற்றும் மிக உயரமான ராட்டின சக்கரம் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்சின் துபாயில் சுற்றுலா பயணிகளை கவரும் விதமாக பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் அதன் ஒரு முயற்சியாக துபாயின் புளூவாட்டர்ஸ் தீவில் ஒரு பிரமாண்ட ராட்டின சக்கரம் கட்டமைக்கப்பட்டுள்ளது. “ஐன் துபாய்“ என பெயரிடப்பட்டுள்ள இந்த ராட்டினம் உலகின் மிகப்பெரிய மற்றும் மிக உயரமான ராட்டின சக்கரம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன் உலகின் உயரமான ராட்டின சக்கரமாக அமெரிக்காவின் லாஸ் வேகாசில் உள்ள “ஹை ரோலர்“ ராட்டினம் இருந்தது. அந்த ராட்டினம் 167 மீட்டர் உயரமானது. தற்போது கட்டப்பட்டுள்ள இந்த ஐன் துபாய் ராட்டினம் 250 மீட்டர் உயரமாகும். ஒரே நேரத்தில் 1750 பேர் இதில் பயணிக்க முடியும். இது பிரிட்டனின் லண்டனில் உள்ள “லண்டன் ஐ“ ராட்டின சக்கரத்தை விட இரண்டு மடங்கு அதிக உயரமாகும்.

கட்டுமரக் கப்பல் செய்வதற்கு என்று கட்டுமரம் என்று ஒரு வகை மரம் இருக்கிறதாமே? அதைப்பற்றி சொல்கிறீர்களா?

**ரவிக்குமார், உவர்மலை**

**பதில்:-**

யார் சொன்னது? கட்டுமரம் என்று ஒரு மரமே இல்லை. ஒதியம் எனப்படுகின்ற மரத்தில்த்தான் பெரும்பாலும் கட்டுமரம் செய்வார்கள். இப்போது கட்டுமரப் பயன்பாடு இல்லாததால் ஒதியமரங்களும் கவனிப்பாரற்றுப் போய்விட்டன.



ரஜனிக்கு பால்கே விருது கிடைத்தது பற்றியும் கமலுக்கு கிடைக்காதது பற்றியும் என்ன நினைக்கிறீர்கள்?

**விஜீத், வட்டுக்கோட்டை.**

**பதில்:-**

ரஜினிக்கு விருது கொடுத்ததே கமலை சீண்ட வேண்டுமென்றுதான். மத்திய அரசை எதிர்த்து அரசியல் செய்ததன் விளைவுதான் இது. அரசியலுக்கு வந்த பிறகு கமல் இனி விருதுகளை எதிர்பார்க்கக் கூடாது. கமல் அரசியலால் அதித லாபம் அடைந்தது ரஜினியாகத்தான் இருக்கும்.








இரண்டு கண், இரண்டு காது படைத்த கடவுள் ஏன் ஒரேயொரு வாயை மட்டும் படைத்தார்?

**தாருஜன், சுன்னாகம்**

**பதில்:-**

"ஒரு தடவைக்கு இரண்டு தடவை வடிவாகப்பார்! உன் பார்வை பிழைக்கலாம். ஒரு தடவைக்கு இரண்டு முறை கூர்மையாகக் கேள்! நீ தவறாக விளங்கி இருக்கலாம். ஆனால் ஒரே ஒரு முறைதான் நீ பேச முடியும். பேசிய சொல்லை திரும்ப பெற முடியாது. ஆகவே அவதானமாக பேசு. " இப்படி ஒரு பெரிய முட்டாக கொடுக்க வேண்டியது தான் தாருஜன்.

தென்னாபிரிக்க அணிக்குள் மீள இன வெறி தாண்டவமாடுதாமே? என்ன கதை அது?

***அயந்தன், வறணி***




**பதில்:-**

இந்த உலகக்கோப்பையின் ஒவ்வொரு போட்டிக்கு முன்பும் தென் ஆப்பிரிக்க வீரர்கள் அனைவரும் ஒரு கால் மண்டியிட்டு ஒரு கரத்தின் விரல்களை மடித்து மேலே உயர்த்தி நாங்களும் கருப்பின மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கிறோம் என்ற உறுதி மொழியை ஏற்க வேண்டும் என்று கட்டளை பிறப்பித்திருந்தது.

தென் ஆப்பிரிக்கா தனது முதல் போட்டியில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக விளையாடியது. அப்போது குய்ண்டன் டீ காக், நார்ட்ஜே ஆகிய வெள்ளைத் தோல் வீரர்கள் சிலர் இந்த உறுதிமொழியை ஏற்காமல் புறக்கணித்து அந்த போட்டியில் விளையாடி உள்ளனர்.

இதற்கிடையில் மேற்கிந்திய தீவுகளுடனான அடுத்த போட்டிக்கு முன்பு கிரிக்கெட் தென் ஆப்பிரிக்கா தனது வீரர்களுக்கு அனுப்பிய சுற்றிக்கையின் மூலம் அனைவரும் இந்த உறுதிமொழியை மண்டியிட்டு எடுத்து தங்களின் ஒற்றுமையை வெளிப்படுத்துவது கட்டாயம் என்று கூறியது. இதை ஏற்க மறுத்த குய்ண்டன் டீ காக் அந்த போட்டியை புறக்கணித்து விட்டார்.

அனைத்து மக்களும் ஒன்றே நிற வெறி தவறு. கருப்பின மக்களை விட வெள்ளை நிற மக்கள் மேன்மையானவர்கள் இல்லை. சமத்துவத்தைப் பேணும் கொள்கையை ஏற்காமல் புறக்கணிக்கும் யாருக்கும் அணியில் இடமில்லை என்று கிரிக்கெட் தென் ஆப்பிரிக்கா கூறாமல் கூறியிருக்கிறது .

மும்பை இந்தியன்ஸ் அணியும் குய்ண்டனின் இந்த முடிவையொட்டி அவரை அணியில் இருந்து விடுவிப்பது குறித்து யோசிக்கிறது என்று செய்திகள் வருகின்றன. இது பார்க்க கடுமையான முடிவாகத் தோன்றினாலும் வளமான எதிர்காலத்திற்கு உரிய சிறந்த முடிவாகும்.

உலகில் மிகப்பெரிய சந்தர்ப்பவாதி யார்?

**கனிகா, மாங்குளம்**




**பதில்:-**

கிட்னி தேவைப்படும் போது மட்டும் மதம் பார்க்காதவர்கள்
இதயம் தேவைப்படும் போது மட்டும் இனம் பார்க்காதவர்கள்
இரத்தம் தேவைப்படும் போது மட்டும் சாதி பார்க்காதவர்கள்
எல்லோருமே சந்தர்ப்பவாதிகள் தான்.

இந்தமுறை உலகக்கோப்பை இருபதுக்கு இருபதை யார் வெல்வார்கள்?

**கஜீபன், உடுப்பிட்டி**

**பதில்:-**

ஏதோவொரு தெற்காசிய அணிக்குத்தான் வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. அதிலும் பாக்கிஸ்தான் இந்தியா இறுதிப் போட்டியில் விளையாடினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எமது இலங்கையர்களின் நிலைதான் கவலை தருகின்றது. பழைய இலங்கையை எப்ப பார்ப்பமோ?




**இலக்கியத்தில், இலக்கணத்தில், இதிகாசத்தில், அறிவியலில், ஆன்மீகத்தில், நடந்தவற்றில், நடப்பவற்றில், கற்றவற்றில், கேட்டவற்றில், பார்த்தவற்றில்** என்று ஐயங்கள் பல எழுந்திருக்கும். பதில் தெரிந்து கொள்ள வேண்டிய கேள்விகளாக, பலரும் அறிந்திருக்க வேண்டிய கேள்விகளாக அவை இருந்தால் அந்த கேள்விகளை எமக்கு அனுப்புங்கள்.

**பின்வரும் வழிகளில் உங்கள் கேள்விகளை எமக்கு அனுப்புங்கள்**

www.thumi.org

thumi2016@gmail.com

www.facebook.com/Thumi06

# ஏற்றுவோம்! ஏற்றுவோம்!

தீபம் என்றால் என்ன? விளக்கா? எண்ணெய்யா? திரியா? தீயா? இவை எதுவுமே தனித்தனியாக இருக்கும் போது அவற்றின் குணங்கள் வேறு வேறாக இருக்கலாம். அவற்றின் நோக்கங்கள் வேறு வேறாக இருக்கலாம். ஆனால் அவையாவும் ஒருங்கு சேர்கையில் தீபம் ஆகிறது. ஆம்! வழிந்து ஓடி விடும் எண்ணெய்யை தீபம் ஒளிரும் வரை தடுத்து நிறுத்த விளக்கு தேவைப்படுகிறது. எண்ணெய் எரியாது. திரிதான் எரிகிறது. திரி மட்டும் போதுமா? இல்லை. எண்ணெய் இல்லாமல் திரியை எரித்தால் சில விநாடிகளில் திரி எரிந்து தீர்ந்து போகும். திரி நின்று எரிய எண்ணெய் வேண்டும். அந்த திரியை முதலில் பற்ற வைக்க பொறி வேண்டும்.

இந்த அத்தனை பொருட்களின் கூட்டு முயற்சிதான் ஒளிரும் ஒரு தீபம் என்பதை மறவாதீர்கள்.

தீபம் ஏற்ற ஏற்ற எண்ணெய்கள் பல உண்டென்றும், ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பலன் உண்டென்றும் சொல்கிறார்கள். எண்ணெய்களை வெப்பப்படுத்தும் போது மருத்துவ ரீதியான நன்மைகள் உண்டாவதை விஞ்ஞானமும் ஏற்கத்தான் செய்கிறது. தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், பசுநெய், இலுப்பெண்ணெய், வேப்பம் எண்ணெய் என பல வகை எண்ணெய்களில் தீபம் ஏற்றலாம்.

தீபத்தோடு தமிழும் விளையாடுகிறது. தீபம் கொழுத்துவதாக கூறக் கூடாதாம். தீபம் அணைப்பதாகவும் கூறக் கூடாதாம். கொழுத்துவதும் அணைப்பதும் அழிவிற்குரிய சொற்களாம். அப்படியானால் எப்படி சொல்வது? தீபம் ஏற்றுவதாகவும், ஏற்றிய தீபத்தை குளிர்விப்பதாகவும் கூறுதல் அழகாம்! வார்த்தைகளிலும் நேரிய சிந்தனைகளை விதைக்க முனைந்திருக்கிறார்கள். தீபம் ஏற்றப்படும் போது எங்கள் வாழ்வும் ஏற்றமடையும் என்றும் தீபம் குளிர்விக்கப்படும் போது



புகைப்படப்பிடிப்பாளர்:~ தெ. ஆதவன்

அதுவரை ஒளிர்ந்த தீபத்தால் எங்கள் மனங்களும் குளிர்ந்து பூரணத்துவமடைவதாகவும் கொள்ளச் சொல்கிறார்கள் முன்னவர்கள்.

இவ்வாறாக தீபங்கள் எங்கள் நாளாந்த வாழ்க்கையில் இணைந்துவிட்ட ஒன்று. இருள் விரட்டும் நோக்கமே பிரதானமாக இருந்த போதும் இன்று தீபங்கள் அந்த நோக்கத்திற்காக ஏற்றப்படுவது மிகக்குறைவு என்றே சொல்ல வேண்டும். பலவர்ண மின்குமிழ்கள் பன்மடங்கு திறனுடன் ஒளியை வழங்க காத்திருக்கும் போது தீபத்தை தேடுவோர் குறைவே. எப்போதாவது மின்சாரம் தடைப்படும் நாட்களில் மட்டும் தீபங்கள் தன் கடன் பணி செய்யும். மற்றபடி இறை வழிபாடுகளோடு தீபங்களின் பாவனை மட்டுப்படுத்தப்படுகின்றன.

இங்கும் ஒரு தீபம் ஏற்றப்பட்டிருக்கிறது. எதற்காக? இருளை விரட்டவாய் இருக்கலாம்! இறை வழிபாடாக இருக்கலாம்! தெற்குத்திசையில் ஏற்றப்பட்டு இருக்கிறதா? மோட்சதீபமாக இருக்கலாம்! மாதம் என்ன? கார்த்திகையா? விளக்கீடு ஆக இருக்கலாம்! ஐப்பசியா ? தீபாவளியாக இருக்கலாம்! அட ஆமாங்க! ஐப்பசிதான்! அப்படி என்றால் தீபாவளியா?


ஆம்! தீபங்களை வரிசையில் ஏற்றும் பண்டிகையான தீபாவளி தான். ஆனால் வழமையாக தீபாவளிக்கு தீபங்கள் ஏற்றுவதில்லையே? அந்த வழக்கம் இன்னும் ஒழிந்து விடவில்லை என்பதை ஒளிரும் இந்த தீபமாவது சொல்லட்டுமேன்!

இந்த தீபாவளியில் ஒரு தீபமாவது எல்லோர் இல்லங்களிலும் ஏற்றுவோம்! இயலுமானவரை இன்னொருவர் வாழ்வையும் ஏற்றுவோம்!

## பன்றியின் சிறுநீரகத்தை மனிதனுக்கு பொருத்தி சாதனை

நெதர்லாந்து ஆராய்ச்சியாளர்களால் ஊசி இல்லாத, செலுத்தும் போது வலி தெரியாத, லேசர் தொழில்நுட்பத்தினாலான சிரிஞ்ச் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. திரவநிலையில் உள்ள மருந்தானது லேசர் கதிரினால் சூடாக்கப்பட்டு நீர்க்குமிழியாக மாற்றப்பட்டு மணிக்கு 100 கி.மீ க்கு அதிகமான வேகத்தில் தோலில் உள்ள நுண்துளைகள் ஊடாக உடலினுள் செலுத்தப்படுகிறது. இதன்போது ஊசி செலுத்தியதற்கான எந்தவொரு அடையாளமோ வலியோ ஏற்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.








சரியான விடைகளை
அனுப்ப வேண்டிய முகவரி
www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

## இடமிருந்து வலம்

1- தீபாவளியோடு தொடர்புடையவன்
7- இலக்கு (குழம்பி)
8- வெட்கம்
9- யாழ்ப்பாணத்தில் அரச முதியோர் இல்லம் உள்ள ஊர்
11- காப்பு (குழம்பி)
12- சம்மதம் (திரும்பி)
15- கிறிஸ்தவர்களின் புனித பூமி
17- வள்ளம்
18- மருத நிலம் (குழம்பி)
19- சூழ்ச்சி
20- இனிப்புக்கு சேர்ப்பது (திரும்பி)

## மேலிருந்து கீழ்

1- கப்பல் தரித்து நிற்க உதவுவது
2- பக்ரீரியாவால் ஏற்படும் தொற்று நோய் (குழம்பி)
3- நலம்
4- சுத்திகரிக்கப்பட்ட மதுபானம்
5- நம்பிக்கத்துரோகம் செய்த ஈழத்து குறுநில மன்னன் (குழம்பி)
6- பொருட்களை அட்டவணைப்படுத்துவது
10- செய்யுள்களில் இரண்டு சீர்களுக்கு இடையில் வருவது
13- இந்திய சுதந்திர தினம் கொண்டாடப்படும் மாதம்
14- தலைவர்
16- உயிர் (தலைகீழ்)
17- பழங்களில் ஒன்று

## குறுக்கெழுத்துப்போட்டி - 31 விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 ரு | ண | 3 கி | 4 ரி | 5 நா | 6 த | 7 ர் |
| 8 தி | ப | | 9 ர | ச | கு | ல் | லா |
| ய | | 10 ஆ | ந் | தை | | 11 கா | ல் |
| 12 மா | 13 க | ல் | த | | 14 ப | | க |
| 15 ன் | மா | | 16 ம் | 17 க | ட | 18 க | |
| | ஸ் | | | 19 ள | கு | ள் | ன் |
| 20 கி | | 21 ப | ழ | னி | | வ | |
| 22 ச | ட் | டி | | | 23 க | ன் | று |




ஐபில் 2021 நிறைவடைந்த நிலையில் அதிக ரன்கள் எடுத்தவர் மற்றும் அதிக விக்கெட்கள் எடுத்தவர் களுக்கு செம்மஞ்சள் மற்றும் ஊதா நிற தொப்பிகள் வழங்கப்படும் அத்துடன் Most Valuable Player உம் தெரிவு செய்யப்படுவர். இம் முறை அதிக ரன்கள் எடுத்தவருக்கான செம்மஞ்சள் நிற தொப்பியானது சென்னை சூப்பர் கிங்ஸ் இன் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான ருதுராஜ் கைக்வாட்க்கும் அதிக விக்கெட்கள் எடுத்தவருக்கான ஊதா நிற தொப்பி மற்றும் Most Valuable Player (MVP)க்கான விருதும் ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களுர் வீரரான ஹர்ஷல் படேலுக்கு கிடைத்தது.




பிரபலமான ESPNcricinfo இணையதளம் Smart Stats எனும் புள்ளிவிபரத்தை கடந்த சில வருடங்களாக பயன்படுத்தி வருகின்றனர். எடுக்கப்படுகின்ற ரன்களுக்கும் வீழ்த்தப்படுகிற விக்கெட்களுக்கும் ஆன பெறுமதி அவை எடுக்கப்பட்ட அல்லது வீழ்த்தப்பட்ட தருணங்களுக்கு (சூழ்நிலைகளுக்கு) ஏற்ப மாறுபடும். இது ஒவ்வொரு கிரிக்கெட் ரசிகர்களுக்கும் தெரியும். உதாரணமாக பலம் வாய்ந்த எதிரணிக்கு எதிராக எடுக்கும் ரன்கள் மற்றும் விராட் கோஹ்லி போன்ற தரமான துடுப்பாட்ட

வீரனை ஆட்டமிழக்க செய்வதற்கும் கடைநிலை வீரர்களை ஆட்டமிழக்க செய்வதற்கும் உள்ள வேறுபாடு.

எனவே ஸ்மார்ட் புள்ளிவிபரங்கள்: ஒவ்வொரு துடுப்பாட்ட/ பந்துவீச்சு பெறுதிக்கும் உண்மையான பெறுமதியை வழங்குகிறது.

இந்த புதிய அளவீடுகள் என்ன?
- ஸ்மார்ட் ரன்கள் (Smart runs)
- ஸ்மார்ட் விக்கெட்டுகள் (Smart rickets)
- ஸ்மார்ட் ஸ்ட்ரைக் ரேட் (Smart strike rate)
- ஸ்மார்ட் எக்கோணமி ரேட் (Smart economy rate)
- புத்திசாலித்தனமான பங்களிப்பு (Smart contribution)
- ஸ்மார்ட் பிளேயர் தரம் (Smart Player quality)

ஸ்மார்ட் ரன்கள் என்பது ரன்கள் எடுக்கப்பட்ட சூழலை கணக்கில் எடுத்துக் கொண்டு கணிக்கப்பட்டது. எனவே, 30 பந்துகளில் 45 ரன்கள் எடுத்தால் இன்னிங்ஸ் எப்போது விளையாடப்பட்டது மற்றும் ரன்களின் ஒப்பீட்டு மதிப்பைப் பொறுத்து அது 50 அல்லது 40 ரன்களாக இருக்கலாம்.

ஸ்மார்ட் விக்கெட்கள் என்பது எடுக்கப்பட்ட விக்கெட்டுகளின் உண்மையான மதிப்பு, துடுப்பாட்ட வீரரின் தரம், துடுப்பாட்ட வீரர் எப்போது ஆட்டமிழந்தது - அவரது இன்னிங்ஸின் ஆரம்பத்திலா அல்லது இறுதியிலா - மற்றும் ஆட்டமிழக்கும் போது ஆட்டமானது சமநிலையில் இருந்ததா அல்லது முடிவு முன்கூட்டியே முடிந்து இருந்ததா என்பதைப் பொறுத்து அப்போதைய போட்டி சூழல் கணக்கிடப்படுகிறது.

ஸ்மார்ட் ரன்கள், ஸ்மார்ட் ஸ்ட்ரைக்-ரேட், ஸ்மார்ட் விக்கெட்கள் மற்றும் ஸ்மார்ட் எகானமி ரேட் ஆகியவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு துடுப்பாட்ட மற்றும் பந்துவீச்சு செயற்பாடுகளும் தாக்க (Impact) மதிப்பெண்ணை பெறுகிறது. ஒரு வீரர் போட்டியில் ஏற்படுத்திய தாக்கம் என்பது அவரது துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு ஏற்படுத்திய தாக்கத்தின் (Impact) எண்ணிக்கையாகும்.

இதன்படி ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருக்காக விளையாடிய

## SMART STATS TOTAL IMPACT

- Total Impact for a player in a match is a numerical value which is the sum of his Batting and Bowling Impacts.
- These Impacts are calculated based on the context of a batting/bowling performance.
- Context is based on an intelligent algorithm which quantifies the pressure on the batsman/bowler at every ball of an innings. This is the Pressure Index (PI) value for each ball.
- The factors which go into calculating PI include: runs required; overs remaining; quality of batsmen at the crease and those to follow; quality of bowlers and number of overs left for each; pitch/conditions, and how easy/tough it is for batsmen/bowlers.
- The PI value is always between 0 and 1. The closer it is to 1, the higher is the pressure on the batsman. (The converse is true for the bowler.)
- The Batting/Bowling Impact is thus a factor not only of the runs scored/wickets taken/economy rate, but also of the pressure under which these performances happened.
- While extra credit for match-winning performances are organically built into the algorithm, it is not unusual for a stand-out performance in a losing cause to be the most impactful in a match.



அவுஸ்திரேலியாவின் க்ளென் மேக்ஸ்வெல் மிகவும் பெறுமதியான வீரராக (Most Valuable Player) ESPNcricinfoவின் புள்ளிவிபர குழுவினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதில் இரண்டாம் நிலையை பஞ்சாப் கிங்ஸ் அணியின் தலைவரான இந்திய வீரர் கே எல் ராகுலும் மூன்றாம் நிலையை சன்ரைசேர்ஸ் ஐராபாத் அணிக்காக விளையாடிய முன்னணி சுழற்பந்து வீச்சாளரான ஆப்கானின் ராஷித் கானும் பிடித்துள்ளார்கள்.

மக்ஸ்வெல் பெற்ற 513 ரன்கள், உண்மையில் 624 ரன்களுக்கு சமமானவை. ஏனெனில் கடினமான ஆடுதளங்களிலும் சூழ்நிலைகளிலும் பெற்றப்பட்டவை. அதிகமான வீரர்கள் சென்னை மற்றும் சார்ஜா




மைதானங்களில் ரன்கள் எடுக்க கடினப்பட்ட போது அவற்றில் மக்ஸ்வெலின் ஸ்ட்ரிக்கே ரேட் முறையே 149.15 மற்றும் 138 .33 ஆகும்.

ஸ்மார்ட் விக்கெட்ஸ் அடிப்படையில் ESPNcricinfoவின் ஊதா நிற தொப்பியை அதிக விக்கட்கள் எடுத்தவர் பட்டியலில் இரண்டாம் நிலையில் இருந்த டெல்லி கேபிட்டல்ஸ் அணியின் அவேஷ் கான் பெற்றுள்ளார். அவேஷ் கான் வீழ்த்திய 24 விக்கெட்கள் 31.15 விக்கெட்களுக்கு சமமானவை. அதேவேளை அதிக விக்கெட்கள் எடுத்த ஹர்ஷல் படேலின் 32 விக்கெட்கள் ஸ்மார்ட் புள்ளிவிபரத்தில் 30.7 விக்கெட்களுக்கே சமமானவை ஆகும்.

ஐபில் 2021 இன் சிறப்பான போட்டி செயற்பாடாக கிரண் பொல்லார்ட் இன் சென்னை சூப்பர் கிங்ஸ்க்கு எதிராக 12 ரன்களுக்கு இரு விக்கெட்களையும் வீழ்த்தி 34 பந்துகளில் 87 ரன்கள் எடுத்தது முதலிடத்தை பிடித்துள்ளது.